Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 15.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 26 ஞாயிற்றுக்கிழமை (10.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 22





விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தையார் வேலுப்பிள்ளையின் பூதவுடல் நேற்று கொழும்பிலிருந்து சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு எடுத்து வரப்பட்டது. அன்னாரின் பூதவுடல் தாங்கிய பேழையை எடுத்துவருவதையும் முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்து வதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி மகிந்த இன்று யாழ். விஜயம்

## முக்கிய முடிபுகளை அறிவிப்பார்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி. சலுகை ரத்து பிரித்தானியா ஆதரவு

(கொழும்பு)

இலங்கைக்கான ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டத்தை ரத்து செய்வது குறித்த யோசனைக்கு பிரித்தானிய அரசாங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

யுத்தம் நடைபெறாத போதிலும் இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத கலாசாரம் நீடித்து வரு வதாக பிரித்தானிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கெரத் (20ஆம் பக்கம் பார்க்க)

## கருஜெயசூரியா இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

ஐக்கியதேசியக்கட்சியின் துணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜெயசூரியா இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்.

யாழ்ப்பாணத்திற்கு வரும் கரு ஜெயசூரியா நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள மகேஸ்வரன் மணிமண்டப திறப்புவிழாவில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## வேலுப்பிள்ளையின் இறுதிக்கிரியை வல்வெட்டித்துறையில் இன்று

### இறுதி நிகழ்வில் தொல். திருமாவளவன் பங்கேற்பு

(கொழும்பு)

பனாகொடை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை, மரணமடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தையாரான திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் தகனக் கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு வல்வெட்டித்துறையில் நடைபெறும். அவருடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவரது மனைவி பார்வதி வேலுப்பிள்ளையும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். வேலுப் பிள்ளையின் பூதவுடலை (20ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் 712 பேர் நேற்று விடுதலையாகினர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் 712 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட இப்போராளிகள் செட்டிக்குளம் நலன்புரி கிராமத்தில் வைத்து அவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக்கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தால் நிறைவேற்ற முடியாததை பொன்சேகா மூலம் நிறைவேற்ற முயற்சி

### த.தே.கூட்டமைப்பை சாடுகிறார் பிக்கு

(கொழும்பு)

யுத்தத்தின் மூலம் நிறைவேற்ற முடியாதவற்றை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியான அணுகுமுறைகளின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முனைப்பு காட்டி வருவதாக அமெரிக்காவின் பௌத்த விகாரையின் பீடாதிபதி வல்பொல பியனந்த தேரர் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச புலி வலையமைப்பின் (20ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள் தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

(C-3343)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரபாகரனின் தந்தையின் மரணத்திலும் அரசியல் இலாபம் தேடுகிறது அரசு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கவலை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மரணமான செய்திகேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய ஒரு விடுதலை அமைப்பின் தலைவரை ஈன்றெடுத்தவர் என்ற அடிப்படையில் அன்னாரின் மறைவு தமிழ் மக்கள் அனைவரையும் கவலையடையச் செய்துள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்பு 60வயதுக்கு மேற்பட்டோரைத் தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்தது. அமரர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் 85 வயதை தாண்டியவர். இருந்தும் பிரபாகரனின் பெற்றோரை தொடர்ந்து தனது பிடியிலேயே வைத்திருந்தது.

இவர்களை விடுவித்து இவர்களது பிள்ளைகளுடன் இணைந்து வாழ அனுமதித்திருந்தால் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களுக்கு இந்த மரணம் நேர்ந்திருக்காது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

பிரபாகரனின் தந்தையார் மீது தமக்கு அக்கறை இருந்ததுபோல் உலகிற்கு காட்டும் முகமாக அவரது பூதவுடலை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க அரசு முன்வந்துள்ளது. கூடவே அன்னாரது துணைவியாரை விடுதலை செய்துமுள்ளது.

இவற்றுக்கும் மேலாக அன்னாரது பூதவுடலை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர் வேட்பாளராக போட்டியிடும் சிவாஜிலிங்கம் அவர்களிடம் கையளித்துள்ளது.

இவை அனைத்தும் அப்பட்டமான தேர்தல் சித்துவிளையாட்டாகவே தமிழ் மக்களால் நோக்கப்படுகின்றது.

மரணங்களைக் கூட இலாபங்களாக அறுவடை செய்ய முயலும் இந்த அரசின் அணுகுமுறை பட்டவர்த்தனமாக வெளிப்படுகின்றது.

எவ்வாறெனினும் அன்னாரை இழந்து தவிக்கும் அவரது துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும், நண்பர்களுக்கும் ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது துயரங்களில் நாமும் பங்கு கொள்கிறோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# வன்னியில் கைவிடப்பட்ட வாகனங்களை படையினர் விற்பனை செய்கின்றனராம்!

(கொழும்பு)

யுத்தம் காரணமாக சேதமடைந்த 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பல இடங்களில் இருப்பதாகவும் இவை குறித்து எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரவிடம் கேட்ட போது யுத்தம் காரணமாக சேதமடைந்த மற்றும் கைவிடப்பட்ட வாகனங்கள் குறித்து தரவுகளை திரட்டியுள்ளதாகவும் இந்த தகவல்கள் சம்பந்தபட்ட மாவட்டச் செயலகங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை இது சம்பந்தமாக கருத்து வெளியிட்ட வவுனியா மேலதிக அரச அதிபர் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் தமது வாகனங்களை கைவிட்டுள்ளதாகவும் இவற்றில் 100வாகனங்கள் வவுனியா பொலிஸாரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனை தவிர வேறு எவ்விதமான தரவுகளும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் கூறினார்.

மோட்டார் சைக்கிள்களை தவிர உழவு இயந்திரங்கள், பேருந்துகள், வான்கள், கார்கள் என எவ்வித கணக்கெடுப்புமின்றி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

உரிமையாளர்கள் அற்ற இந்த வாகனங்களை பாதுகாப்பு தரப்பினர் விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# ஐ.தே.க-ஜே.வி.பி இணைந்து நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் கூட்டாக இணைந்து நீர்கொழும்பில் எதிர்ப்பு போராட்டமொன்றை நடத்தியுள்ளன. நேற்று பொலிஸாருக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

தேர்தல் காலத்தில் பொலிஸார் பக்கச் சார்பின்றி செயற்பட வேண்டுமென, குறித்த இரண்டு கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

பொலிஸார் பக்கச்சார்பின்றி செயற்பட வேண்டுமெனக் கோரும் வகையிலான மகஜர் ஒன்றையும் குறித்த கட்சிகள் கூட்டாக இணைந்து சமர்ப்பித்துள்ளன.

குறித்த பிரதேசங்களில் தமது கட்சிக் காரியாலயங்கள் பல தாக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் பொலிஸார் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் தமது தேர்தல் காரியாலயங்கள் சேதமடைந்துள்ளதாகவும் மூவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# வேலுப்பிள்ளையின் மறைவால் தமிழ் மக்கள் ஆழ்ந்த கவலை

## பத்மினி சிதம்பரநாதன் இரங்கல்

(கொழும்பு)

அமரர் வேலுப்பிள்ளை அவர்கள் 86 வயதில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலும் பனாகொடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். திடீரென புதனிரவு காலமானதாக செய்தி வந்தது. அன்னாருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம். அமரர் வேலுப்பிள்ளையின் மறைவு தமிழ் மக்களை பேரதிர்ச்சிக்கும் பெரும் கவலைக்கும் உள்ளாகியுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித் துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தான் பெற்றெடுத்த புதல்வனை தமிழுக்கு கொடுத்தற்காக 86வயதிலும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலும் பனா கொடை தடுப்பு முகாமில் வைக் கப்பட்டிருந்தார்.

அவர் ஏன் இறந்தார்? எப்படி இறந்தார்? என்பது தெரியாமல் இறந்துவிட்டார் என்ற செய்தியை மட்டுமே தமிழ் மக்கள் அறிந்துள்ளனர். தமிழ் மக்கள் பூரணமாக ஒடுக்கப்பட்ட நிலையில் இந்தச்சாவு குறித்து என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து நிற்கிறார்கள்.

தமிழுக்கு தன் மகனை கொடுத்த ஒரு பெருந்தகை தனிமையில் வாடி உயிர் விட்டாரோ என்று ஒரு குற்ற உணர்வு தமிழ் நெஞ்சங்களை பற்றிப்பிடித்துள்ளது.

தமிழுக்கு தன்தனயனை ஈந்த அருந் தந்தைக்கு தமிழ்க் குலமே மைந்தர்களானார்கள்.

அவரது இறுதி அஞ்சலியில் தமிழ் மக்கள் கலந்து கொண்டு இறுதி மரியாதையும், வணக்கத்தையும் நல்குவோம். (ந-5)


## காணி விற்பனைக்கு

மானிப்பாய் லோட்டன் வீதியில் 2 பரப்பு காணி அமைதியான சூழலில் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:- 077 9493709

(331)

## அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



இடம்:- ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமம்

காலம்:- 10.01.2010 ஞாயிறு

நேரம்:- மு.ப. 11 மணி

நிகழ்வுகள்

- ஆன்மிகப் பேருரை
- நினைவுப் பேருரை
- 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல்
- முதியோர்களிற்கு உடுபுடைவைகள் வழங்குதல்
- விஷேட அன்னதான நிகழ்வு

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

(C-4176)

## மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர் குலம் U.K Citizen (B.Sc) 24.05.1972இல் பிறந்தவர் Company ஒன்றில் வேலை செய்கின்றார். செவ்வாய்க் குற்றம் எதுவும் இல்லை. A/L படித்த ஆங்கில அறிவு உள்ள தகுந்த மணமகளை எதிர்பார்க்கின் றனர்.

தொடர்பு :-
T.P No. 0044-7784772542

(327)

## விகற்ப மருத்துவம்

எலும்புகளை முட்டிகளாக வீங்கச் செய்யும் வாதம், அல்சர், நீரிழிவு நோயின் உபாதைகளை குணமாக்கும் மருந்தியல்

தினமும்:-3PM - 6PM

உயரப்புல பிள்ளையார் கோவிலடி,
தபால் பெட்டி லேன்,
ஆனைக்கோட்டை. (இ)

## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 29,34,37வயது, Canada Citizen 33, 36, 40 வயது, Holand Citizen 36 வயது, Swiss Citizen 28,33,42 வயது, Austerliya Citizen 36 வயது (M.Sc), ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673

(327)

## வீடு வாடகைக்கு

தெஹிவளையில் இரண்டு அறைகளுடன் சகலவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

1-5 நாட்களுக்கு 1900/= படியும், 6-10 நாட்களுக்கு 1700/=படியும், 10க்கு மேற்பட்ட நாட்களுக்கு 1500/= படியும் அறவிடப்படும்.

(312) தொடர்புக்கு:-077 0641256

## வேலையாள் தேவை

A/L,O/L படித்த வேலையாள் தேவை (ஆண்)

'சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

தொடர்புக்கு:-
ஆர்க் என்ரபிறைசஸ்
150, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 2052

(330)

## இலங்கைத் தமிழரசுக் கட்சி வருடாந்த தேசிய மாநாடு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு இம் முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இடம்:- யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபம்.

காலம்:- 2010 ஜனவரி 10ஆம் திகதி

நாள்:- இன்று ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- மு.ப.10.00 மணி

நிகழ்ச்சி நிரல்

- மௌனப் பிரார்த்தனை
- தமிழ்த்தாய் வாழ்த்து
- இலங்கைத் தமிழரசுக் கட்சி கீதம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பொதுக் குழுத் தீர்மானங்கள்
- இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 60ஆம் ஆண்டு மலர் வெளியீடு
- விருந்தினர் உரை
- நன்றியுரை

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த காலச் சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கௌரவ இரா.சம்பந்தன் பா.உ அவர்கள் சமகால தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தமது தலைமை உரையை நிகழ்த்துவார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

மாவை சோ.சேனாதிராசா
பொதுச் செயலாளர்.

கூ.சே.குலநாயகம்
நிர்வாகச் செயலாளர்,
தலைமைச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C-4168)

# பிறந்தநாள் நினைவுதினமும் மகேஸ்வரன் மணிமண்டப திறப்புவிழாவும்

## அமரர் திரு. தியாகராஜா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சர், கொழும்பு, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)



எங்கள் இதயத்தில் உறையும் தெய்வமே!
ஜனவரி பத்து உங்கள் பிறந்தநாள்
முன்பெல்லாம் உங்கள் பிறந்தநாள்
எங்கள் குதூகலமான இன்பநாள்
எத்தனைகோயில்களில் வழிபாடு
எங்களுக்கு எத்தனை விதமான புத்தாடைகள்
எத்தனைவிதமான அன்பளிப்புகள்
உங்களிடம் வரும் எத்தனைபெரியார்களின்
நல்வாழ்த்துக்கள், அன்பு பாராட்டுக்கள்
கற்பனை பண்ணமுடியாத இன்ப அனுபவங்கள்
இன்று அத்தனையும் துன்பமாச்சே
இந்த நாள் உங்களை நினைத்து
கண்ணீர் விடும் நாளாச்சே
உங்கள் நினைவில் எங்கள் துயரை மறந்து வாழ
எங்களை வாழ்த்துங்கள்.

உங்கள் அன்புச்செல்வங்கள்
பவதாரணி,
பிரணவன்,
பவித்திரா

**மண்ணில்**
**10.01.1966**

**விண்ணில்**
**01.01.2008**

அமரர் மகேஸ்வரனின் நினைவாக நல்லூர் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள 'மகேஸ்வரன் மணிமண்டபம்' இன்றுகாலை 9.30 மணிக்கு சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக்குருக்கள் (ஆதீன குரு நாக பூஷணி அம்பாள் தேவஸ்தானம் - நயினாதீவு, பிரதமகுரு ஸ்ரீ புவனேஸ்வரி தேவஸ்தானம் - சுது மலை) அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளது. ஈழத்து சிதம்பரத்திருத்தலயாத்திரை, முருகப்பெருமான் தோத்திரமாலை ஆகிய நூல்களும் வெளியிடப்படவுள்ளன. அத்துடன் திருமதி வசந்தா வைத்தியநாதனின் பேருரையும் இடம்பெறும்.

தகவல்: திருமதி விஜயகலா மகேஸ்வரன், பிள்ளைகள், குடும்பத்தினர்.

இல. 32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.
தொலைபேசி இல: 011 2360679

276, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 2227559

# பிஸ்பக்ற் வர்த்தக முதலீட்டு மாநாடு வெற்றி; பங்கேற்ற வர்த்தகப் பிரமுகர்கள் தெரிவிப்பு




மாநாட்டில், லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனியின் தலைமை நிறைவேற்று அதிகாரி பிறின்ட்லி டி செலா , அவுஸ்திரேலிய வாழ் இலங்கையர் நாகேஸா விக்கிரமசூரிய ,அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர்,சமாதானத்துக்கான வர்த்தக கூட்டமைப்பு பணிப்பாளர் சுரேஷ் டி மெல் ,ஏசியன் அலைன்ஸ் பணிப்பாளர் ரேசலி அலி இலங்கை வர்த்தக சங்கத் தலைவர் டாக்டர் அனுர எக்கநாயக்க, யாழ்.வர்த்தக தொழிற்கூட்டமைப்பு மற்றும் யு.என்.டி.பி. ஒருங்கிணைப்பாளர் இராசநாயகம் சர்வானந்தா ஆகியோர் கலந்து கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை ,மீன்பிடி ,விவசாயம் ,கட்டுமானம் போன்ற துறைகளுக்கு சிறந்த வாய்ப்பு இருக்கிறது. இதை முதலீட்டாளர்கள் அதிகளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வட பகுதி மக்களில் 95 வீதமானோர் பெறும் கடன்களை மீளச் செலுத்துகிறார்கள். இது அவர்களின் நம்பிக்கையைக் காட்டுகிறது என கடந்த வாரம் நடைபெற்ற பிஸ்பக்ற் மாநாட்டில் கலந் து கொண்ட வர்த்தகப் பிரமுகர் அர்ஜுன ஹேரத் தெரிவித்தார்.

பிராந்திய பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, அமைதிக்கான முதலீடு என்னும் மாநாடு சமாதானத்துக்கான வர்த்தகக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 6ஆம் திகதி யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் 200இற்கும் மேற்பட்ட வர்த்தகப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இம் மாநாடு 5 அமர்வுகளாக நடைபெற்றது.

புலம்பெயர்ந்தவர்களதும்,வர்த்தக சமூகத்தினதும் எதிர்பார்ப்பு என்னும் தலைப்பில் முதலாவது அமர்வும், பிராந்திய தொழில் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடலாக இரண்டாவது அமர்வும், தொழில்நுட்ப அமர்வாக மூன்றாவது அமர்வும்,சி.எஸ்.ஆர்.திட்டம் குறித்து நான்காவது அமர்வும் நடைபெற்றது.

இது குறித்து ஹேரத் மேலும் தெரிவிக்கையில் ,சுற்றுலாத்துறை வடக்குக் கிழக்கில் உடனடி வளர்ச்சிக்கான துறையாக உள்ளது. யாழ்ப்பாணத்துக்கு ஒவ்வொரு நாளும் 500பேர் வரை சுற்றுலா நோக்கில் வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் யாத்திரிகர்கள். இந்தப் பகுதியின் சுற்று லாத்துறை ஆரம்பக் கட்டத்தில் உள்ளது.

நாட்டின் 13.5 வீதமாகவுள்ள வட மாகாணத்தில் 12 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் உள்ளனர். இவர்களின் எழுத்தறிவு வீதம் 92.5 வீதமாகவுள்ளது. இந்த உயர் மனித வளம் அபிவிருத்திக்கு நம்பிக்கை அளிக்கும் விடயமாகும்.

நாட்டின் தேவையில் சிவப்பு வெங்காயத்தில் 50 வீதத்தையும் மீன் வளத்தில் 30 வீதத்தையும் வட பகுதியே நிறைவு செய்கிறது.

இருந்தாலும் மேல் மாகாணத்தில் மொத்தத் தேசிய உற்பத்தி (GDP) 48.4 வீதமாகவுள்ள நிலையில் வடக்கின் பங்களிப்பு 2.9 வீதமே என்றார்.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ஏற்றுமதி அபிவிருத்தி சபை பணிப்பாளர் ஜோர்ச் பெரேரா தெரிவிக்கையில் ,யாழில் விரைவில் ஏற்றுமதி ஆய்வு நிலையம் ஒன்றை நிறுவவுள்ளோம். ஏற்கனவே ஒரு ஐஸ்தொழிற்சாலை அமைக்க உதவியுள்ளோம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு பனை ,பழங்கள் மற்றும் காய்கறிகள் ,மீன்பிடி ,மரத்தளபாட உற்பத்தி ,மதுபானம் ,உப்பு போன்ற தொழில்களுக்கும் இரசாயனத் தொழில்களுக்கும் பிரகாசமான எதிர்காலம் உள்ளதாக தெரிவித்தார்.

இவ் வகைப் பொருட்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் மிகப் பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, உலக வரலாற்றில் போரினால் சிதைவடைந்த நகரங்களை முதலீட்டாளர்கள் மீண்டும் கட்டியெழுப்பியது போல, யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

எல்லா வளங்களும் நிரம்பிய யாழ்ப்பாணத்தில் உள்ளூர் முதலீட்டாளர்களும் புலம்பெயர்ந்தவர்களும் எதுவித அச்சமும் இன்றி முதலீடுகளை மேற்கொண்டு வளமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க முடியும் என்றார்.

இம் மாநாட்டுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு, ஐ.நா.புலம்பெயர்ந்தோர் அமைப்பு ஆகியன அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.





## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.56 | 115.19 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 180.32 | 184.08 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.76 | 165.65 |
| சுவிஸ் பிராங் | 108.87 | 112.34 |
| கனேடிய டொலர் | 108.81 | 112.41 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.21 | 106.33 |
| சிங்கப்பூர் டொலர் | 80.89 | 82.83 |
| ஜப்பான் யென் | 1.21 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.51 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.12 | |

# டயலொக் சி.டி.எம்.ஏ ஊடாக E-சனலிங் செய்யும் வாய்ப்பு



இலங்கையின் முதற்தரமான தொலைத்தொடர்பாடல் சேவை வழங்குநரான டயலொக் ரெலிகொம் தற்போது தமது e-சனலிங் சேவையை நிலையான தொலைபேசி (CDMA) வாடிக்கையாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

டயலொக் CDMA வாடிக்கையாளர்கள் தமது CDMA தொலைபேசியில் இருந்து 225க்கு அழைப்பதன் மூலம் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்தில் இருந்தவண்ணமோ தமக்கு விருப்பமான வைத்தியர்களை 'சனல்' செய்ய முடியும். டயலொக் தனது ஆறு மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் தளத்திற்கு வழங்கியுள்ள ஒரு பெறுமதிசேர் சேவையாக e-சனலிங் அமைகின்றது.

டயலொக் நிலையான தொலைபேசி வாடிக்கையாளர்கள் இப்போது தமது CDMA தொலைபேசியில் இருந்து 225 அழைப்பதன் மூலம் தாம் விரும்பிய வைத்தியர்களை சென்று காண்பதற்கான நேரத்தை CDMA தொலைபேசி மூலமா கவே உறுதிப்பதிவு செய்யலாம்.

இதற்கான கட்டணமானது வைத்தியருடைய கட்டணம், வைத்திய சாலைக் கட்டணம் மற்றும் இந்த செயற் பாட்டிற்கான கட்டணம் என்பவற்றை உள்ளடக்கும்.

இந்த செயற்பாட்டிற்கான உறுதிப்படுத்தல் விபரங்களை வாடிக்கையாளர் விரும்பின் தொலைபேசியினூடாகவோ அல்லது SMS மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். நிலையான தொலைபேசி மற்றும் தரவுகள் சேவையின் பிரதம செயற்படுத்தல் அதிகாரியான சுரேன் குணவர்த்தன இதுபற்றிக் கூறுகையில்;

மொபைல் சுற்றாடலின் அபிவிருத்தியானது தொலைத்தொடர்பாடல் துறையில் அதன் வாடிக்கையாளர்களுக்கு நல்லதொரு பாவனையாளர் அனுபவத்திற்கான சிறந்த சலுகைகளை வழங்குகிறது.

இந்த வகையில் அத்தகையதொரு சலுகையை எமது நிலையான தொலைபேசி பாவனையாளர்களுக்கு வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது எமது வாழ்க்கையை மட்டுமல்லாது நாம் வர்த்தகம் செய்யும் விதத்தையும் மாற்றியுள்ளதோடு, டயலொக்கானது வாடிக்கையாளர்களை மையப்படுத்தி புதிய படைப்புக்கள் மற்றும் அதிசிறந்த தொழில் நுட்பம் போன்றவற்றின் உலகமாற்றத்தில் இலங்கையை முன்னிறுத்தி உள்ளது என்றார்.

இலங்கையின் அனைத்து தனியார் மருத்துவமனைகளுக்கும் வருகைதரும் வைத்தியர்களை காண்பதற்கான தொல்லையற்ற தொரு உறுதிப்பதிவாக e-சனலிங் காணப்படுகின்றது.

இந்த சேவையை பெற விரும்பின் உங்கள் டயலொக் நிலையான தொலைபேசியில் இருந்து (CDMA) 225க்கு அழையுங்கள்.

**டயலொக் புரோட்பேன்ட் நெட் வேர்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் பற்றி**

டயலொக் புரோட்பேன்ட் நெட் வேர்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனம், டயலொக் ரெலிக்கொம் PLCக்கு முழு உரித்துடைய ஓர் இணைய நிறுவனமாகும்.

இந்த நிறுவனமானது இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பிற்கு முதுகெலும்பாக செயற்பட்டு தகவல் பரிமாற்றத்தில் முக்கிய பங்களிப்பு வழங்குவதில் முன்னோடியாய் விளங்குகிறது.

நிறுவன முகாமைத்துவ முறைகள், வர்த்தக செயற்பாடுகள் மற்றும் தரம்வாய்ந்த முறைமைகள் என்பவற்றைக் கொண்டு சர்வதேசரீதியில் சிறந்து விளங்கும் நடைமுறைகளை பின்பற்றுவதில் இந்த நிறுவனம் தெளிவான கொள்கைகளைக் கொண்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த முகாமைத்துவ தொழில் நெறிஞர்களின் தலைமையில் இயங்கும் இந்நிறுவனமானது,

ஆசியாட்டா குரூப் பெர்ஹாட் (முன்னர் TM இன்டர் நெஷனல் Sdn Bhd என்று அறியப்பட்ட நிறுவனம்), கீழ் இலங்கையில் இயங்கும் டயலொக் டெலிகொமின் வழி நடத்துதலிலும் ஆதரவிலும் இயங்கிவரும் இணை நிறுவனமாகும்.

டயலொக் புரோட்பேண்ட் நெட் வேர்க்ஸ் பிரைவட் லிமிட்டட் நிறுவனமானது CDMA தொழில்நுட்பத்தில் அமையப் பெற்ற உயர் தரத்திலான கம்பியில்லா நிலையான தொலைபேசி சேவைகளையும் வழங்கி வருகின்றது.

தற்போது டயலொக் CDMA தொழில் நுட்ப மானது நாடு முழுவதும் சுமார் 2 இலட்சம் வாடிக்கையாளர்களுக் கான சேவையினை வழங்கி வருகின்றது.

# மாநாட்டு மண்டபம் அமைக்க அராலியிலேயே இடம் தெரிவு

மாநாட்டு மற்றும் கண்காட்சி மண்டபம் அமைக்க சுற்றுலா அதிகாரசபையினால் அராலியில் கடற்கரைப்பிரதேசமாக ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்தான தூரம் போக்குவரத்து வசதி என்பவற்றையும் கருத்தில் கொண்டே இவ்விடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும்;

இத்திட்டத்துக்கு சகலதரப்பினரின் ஆதரவும் கிடைக்கும் என நம்புவதாகவும் இவ் வேலைகள் விரைவில் ஆரம்பிக்க வுள்ளதாகவும் இலங்கை மாநாட்டு பணியக பொது முகாமையாளர் விபுல வனிகசேகர தெரிவித்தார்.

கூட்டங்கள் ,மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் நடத்தும் மண்டபங்கள் அபிவிருத்தியில் முக்கிய அங்கம் எனவும் தற்போது இதைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம், நீர்கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் மாநாட்டு மற்றும் கண்காட்சி மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் வசதிகள் அதிகரிக்கப்பட்டு மெருகேற்றப்பட்டு வருவதாகத் தெரிவித்ததார்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3514.63 | 36.07 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4039.36 | 38.12 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 929.60 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : டயலொக்,த புக்கிட் ,கார்ஷன் ,என்வெயார்மென்டல் றிசோசஸ் ,ஏசியன் ஹொஸ்பிட்டல் &புறப்பட்டிஸ்.

***சரிவைக் காட்டிய பங்குகள்***. ஜோன் கீல்ஸ் ஹொட்டல் ,ஆஸிரி ஹொஸ்பிட்டல் ,கொழும்பு டெக்யாட் ,ஈகிள் இன்சுரன்ஸ் ,சிலோன் தியேட்டர்ஸ்.

**கு.முருகதாஸ்**

# 2010 புத்தாண்டு பலன்கள்

## விருச்சிகம்

**(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)**

**பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும்!**

"புகழ்" ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!

புத்தாண்டு உங்களுக்குப் பொன் கொழிக்கும் ஆண்டாக அமையப் போகிறது. பொருளாதார நிலை உயர்ந்து புதிய பாதையை உங்களுக்கு அமைத்துக் கொடுக்கப் போகிறது.

நம்பிக்கைகள் அனைத்தையும் நடைபெற வைத்தது இந்த 2010 புத்தாண்டு தான் என்று சொல்லப்போகிறீர்கள்.

ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் இரண்டாமிடத்தில் சூரியன், சுக்ரன், புதன் ஆகிய மூன்றும் இணைந்திருக்க அதை ஒன்பதுக்கு அதிபதியான சந்திரன் பார்க்கும் விதத்தில் வருடம் தொடங்குவதால் இன்பங்களை அதிகம் எதிர்கொள்ளும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப்போகிறது.

இயற்கையிலேயே சரஸ்வதியின் அருள் பெற்ற உங்களுக்கு இலக்குமியும் இல்லம் தேடி வந்து, இப்பொழுது பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யப்போகிறார். உங்கள் ராசிநாதன் செவ்வாய் கடகத்தில் சஞ்சரிக்க, குருவின் பார்வை ஸ்தானத்தில் பதிவதால், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். காரியங்கள் அனைத்தும் கைகூடும். பாராட்டும், புகழும் அதிகரிக்கும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி பரிகாரங்கள் செய்து யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் யோகங்கள் வந்துசேரும்.

தேக நலனும் சீராகும். செல்வ நிலையும் உயரும். வழிபாடுகள்தான் உங்கள் வாழ்க்கையில் வளர்ச்சியைக் கூட்டுகின்றன என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்வீர்கள்.

பெயரியல் முறையில், எண்கணித அடிப்படையில், செவ்வாய் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்ச நிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், வெற்றி மீது வெற்றி வந்துசேரும். வியக்கும் விதத்தில் வாழ்க்கையும் அமையும். இந்த 2010 இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்களை வழங்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### 1-1-2010 முதல் 30-4-2010 வரை

இக்காலம் உங்களுக்கு இனிய காலமாக அமையும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

தன ஸ்தானம் வலுவடைவதால் வங்கிச் சேமிப்பு உயரும். வாழ்க்கைத் தேவை கள் பூர்த்தியாகும். ஊரார் போற்றும் விதத்தில் ஒப்பற்ற காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

கடகத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால், ஆரோக்கியத்தில் மட்டும் கொஞ்சம் கூடுதல் அக்கறை காட்டுவது நல்லது. சுபவிரயங்களை மேற்கொள்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும். பூர்வீக சொத்துக்களில் இலாபம் கிடைப்பதைக் கொண்டு புதிய சொத்துக்கள் வாங்குவதோடு, வீடு கட்டும் வாய்ப்பையும் பெறுவீர்கள்.

வாக்கு ஸ்தானத்தில் புதன் பத்துக்கு அதிபதி சூரியனுடன் கூடி புத–ஆதித்ய யோகத்தை உருவாக்குவதால் கலைத்துறை, எழுத்துத் துறை, பத்திரிகைத்துறை போன்றவற்றில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும்.

குரு உங்கள் ராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். தேசப்பற்று மிக்கவர்களும், தெய்வப்பற்று மிக்கவர்களும் வாசமலர் போல, உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழிகாட்டுவர்.

3, 4 க்கு அதிபதியான சனி பதினொன்றில் வக்ரம் பெறுகிறார். அள்ளிக் கொடுக்கும் சனி வக்ரம் பெறுவதால், அவரை முறையாக வழிபடுவது நல்லது.

சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை நீங்கள் மேற்கொண்டால், இடையூறுகள் அகன்றோடும். இன் பங்கள் இல்லம் தேடி வந்துசேரும். வைரவர் வழிபாடும் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

### 1-5-2010 முதல் 31-8-2010 வரை

இக்காலத்தில் 2, 5 அதிபதியான குரு வக்ரம் பெறுகிறார். எனவே, குடும்பச் செலவுகள் கூடலாம். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

மீன குருவின் பார்வை பலத்தால் உங்கள் ராசி புனிதமடைகிறது. ராசியின் மீது குரு பார்வை பதியும் நேரத்தில் தொட்ட காரியங்கள் எல்லாம் வெற்றி பெறும். தொல்லைகள் எல்லாம் அகன்றோடும்.

வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க வைக்கும் மீன குருவின் சஞ்சாரமும் இக்காலத்தில் தான் ஏற்படுகிறது. இக்காலம் ஒரு பொற் காலம் என்றே சொல்லலாம்.

குருவின் பார்வை ஒன்பதாமிடத்தில் பதிவதால் நீண்ட நாள் ஆசை நிறைவேறும். நினைத்த காரியங்கள் வெற்றி பெறும். "கவலை" என்ற மூன்றெழுத்து உங்களை விட்டு அகலப்போகிறது. கை நிறைய பொருள் குவியும் இந்த நேரத்தில் உறவினர்களுக்கும் கொடுத்து உதவுவீர்கள். பொது வாழ்வில் புகழ் கூடும்.

புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கட் செல்வாக்கு மேலோங்கும் இந்த நேரத்தில் உங்கள் தலைமையிலேயே ஒரு சில நல்ல காரியங்கள் நடைபெறப்போகின்றன.

அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்துசேரும். எண்ணிய எண்ணங்கள் யாவையும் இனிதாக நிறைவேற்றுவது குருவின் பார்வதைான். அதன் பார்வை பதினொன்றாமிடத்தில் பதிவதால் தொழிலில் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூலாகிவிடும்.

புதிய தொழில் தொடங்கும் முயற்சிகளிலும் ஈடுபடுவீர்கள். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் அதில் இருந்து கொண்டே மனைவி, மக்கள் பெ்யரில் தொழில் தொடங்க முன்வருவர்.

சென்ற ஆண்டில் ஏற்பட்ட சிக்கல்கள் அனைத்தும் விலகும். அதற்குப் பக்கபலமாக நண்பர்கள் உங்களுக்குக் கை கொடுத்து உதவுவர்.

தென்முகக் கடவுளை வழிபட்டு வந்தால் திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறும்.

### 1-9-2010 முதல் 31-12-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். இருப்பினும், செப்டம்பர் 22 ஆம் திகதி செவ்வாய், சுக்ரன், துலாம் ராசியில் இணைகிறார்கள்.

ஒக்டோபர் மாதத்தில் சூரியன், சுக்ரன், புதன் ஆகிய மூன்று கிரகமும் துலாம் ராசியில் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். இந்த கூட்டுக்கிரக யோகம் உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை உருவாக்கப்போகிறது.

பூமி யோகம் முதல் புகழ் குவிக்கும் யோகம் வரை தெய்வ பலத்தோடு தக்க விதத்தில் உங்களுக்கு வழங்கப்போகிறது. எனவே, குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும்.

மாற்று இனத்தவர்கள் கைகொடுத்து உதவுவர். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசு வழியிலும் அனுகூலம் உண்டாகும். சகோதர, சகோதரிகளின் ஒத்துழைப்போடு வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வீர்கள். கிரிவலம் வருவதன் மூலம் கீர்த்தியைக் காணலாம்.

பொன்னும், பொருளும், போற்றுகின்ற செல்வாக்கும் இன்னும் பெருக கற்பக விநாயகரைக் கை தொழுது போற்றுங்கள்.

**சிவல்புரி சிங்காரம்**

மதிப்பும், மரியாதையும் உயரும். உங்கள் சொல்லைக் கேட்டு நடக்க இல்லத்தினர் முன்வருவர்.

எதிர்கால நலன் கருதி ஒரு தொகையைச் சேமித்து வைப்பீர்கள். மே மாதத்திற்கு மேல் மிகச்சிறந்த பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகின்றன. சொத்து சேர்க்கையும், சொந்தங்கள் மதிக்கும் வாழ்க்கையும் உங்களுக்கு அமையப் போகிறது.

கணவன் - மனைவிக்குள் கனிவு கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகிறது.

சுய ஜாதகத்தில் செவ்வாய் பலமறிந்து பரிகாரங்களைச் செய்தால் செல்வாக்கு மேலோங்கும். (தொடரும்)

---

# சந்தேகத்திற்கு இடமான வகையில் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள்

## மத்திய வங்கி கண்காணிப்பு

(கொழும்பு)

அண்மைக் காலமாக சந்தேகத்திற்கு இடமான வகையில் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்று வருவதாகவும், இது குறித்து மத்திய வங்கி கண்காணிப்பு பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெருந்தொகையான வெளிநாட்டுப் பணம் சந்தேகத்திற்கு இடமான முறையில் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரின் வங்கிக் கணக்குகளில் பெருந்தொகை வெளிநாட்டுப் பணம் அண்மையில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில வர்த்தக நடவடிக்கைகளுக்காக பெருந்தொகையான வெளிநாட்டு பணம் திடீரென முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக வெளிநாட்டு சக்திகள் பெருந்தொகைப் பணத்தை செலவிடுவதாகவும் மத்திய வங்கி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்களும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்கு நிதி உதவி அளித்து வருவதாக காணி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

குறித்த வெளிநாட்டுப் பணம் எவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டது என்பது குறித்து விரைவில் அம்பலப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# கூட்டுறவுத் துறை ஊழியர்கள் 40 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

கூட்டுறவுத் துறையில் சேவை புரிந்து ஓய்வு பெற்ற 40 ஆயிரம் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை ஆகியன ஒன்றிணைந்து நிதியமைச்சு, மத்திய வங்கி மற்றும் சமூக சேவைகள் அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமூக பாதுகாப்பு சபைக்கு வழங்கிய வாக்குறுதியையடுத்தே இந்த ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டுறவு ஊழியர்களின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சில ஊழியர்களுக்கு அடையாள ஓய்வூதியப் பத்திரங்களை வழங்கினார். (6)

# இலங்கைக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தும் முயற்சியில் வெளிநாட்டு அமைப்புக்கள்

## புலனாய்வுப் பிரிவினர்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு நான்கு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கடும் முயற்சி மேற்கொண்டு வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக போலியான போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதன் மூலம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த குறித்த அமைப்புக்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து இயங்கி வரும் வோர் வித்தவுட் விட்னஸ், டெமில்ஸ் எகேன்ஸ்ட் ஜோனோசைட், ஜெர்மனியின் ஜே.டி.. எஸ் மற்றும் அயர்லாந்தின் அய்ரிஸ் போரம் ஆகிய அமைப்புக்களே இவ்வாறு இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் சதித் திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பினர் பெருந்தொகைப் பணத்தை இந்த நிறுவனங்களுக்கு வழங்கி வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கடற்படைத் தளபதியையும் போர்க் குற்றவாளிகள் பட்டியலில் உள்ளடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# கருச்சிதைவால் சிதைவுறும் எதிர்காலம்

## குழந்தையொன்று படைக்கப்படுவது இறைவனால் அதை அழிப்பது பாவமாகும் என்பது ஆன்மீக தர்க்கம்

கருச்சிதைவு அல்லது கருவை அழித்தல் சம்பந்தமாக மக்கள் மத்தியில் சாதகமானதும் பாதகமானதுமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. கருச்சிதைவை அனுமதிக்கக்கூடாது என்பதற்குப் பலமான ஆதரவு உண்டு என்று சட்டத்தரணி கே. ஜி.ஜோன் தெரிவித்தார்.


டி.சொய்ஸா, மகப்பேற்று மருத்துவமனையின் வைத்திய நிபுணர் இராமநாதன் ஸ்ரீஸ்கந்தா.

விசேடமாக ஆன்மீகமான தாக்கம் இதற்குக் கூடிய ஆதரவை அளிக்கின்றது. அதாவது இறைவனால் படைக்கப்பட்ட உயிரை பறிக்கக்கூடிய உரிமை மனிதனுக்குக் கிடையாது. ஆனால் காலத்தின் மாற்றமும் சமுதாயத்தின் மாற்றமும் இதற்கு முரணான கருத்தை முன்வைப்பதை மறுக்க முடியாமல் இருக்கின்றது.

ஆனால் இந்த இரு வாதத்தையும் ஒரு முறை சிந்தித்துப் பார்த்தால் எதற்கு கூடிய ஆதரவு உண்டு என்பதை விளக்குகின்றார் சட்டத்தரணி கே.ஜி. ஜோன்.

### ஆன்மீக தர்க்கம்

விசேடமாக கீழைத்தேச நாடுகளான இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் குடும்பம் என்பது பரிசுத்தமானது. இப்பரிசுத்தத்தை மாசுப்படுத்தும் எந்தச் செயலையும் சமூகம் அனுமதிப்பதில்லை. பெண்கள் பலவீனமானவர்கள் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பைக் கொடுக்க வேண்டியவர்கள் ஆண்களாவர். பெண்கள் மதிப்புள்ளவர்களாக இருக்க வேண்டுமானால் அவர்கள் நேர்மையானவர்களாகவும் தூயவர்களாகவும் இருக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே கீழைத்தேச நாடுகளின் குடும்பக் கலாசாரம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு இடையூறாக இருப்பது கருச்சிதைவாகும். கருச்சிதைவுக்கு அனுமதியளித்தால் சமுதாயத்தில் தூய நிலைமை நீடிக்க முடியாமல் போகும்.


குழந்தை ஒன்று படைக்கப்படுவது இறைவனால். அப்படி படைக்கப்பட்ட குழந்தையை அழிப்பது பாவமாகும். இதனால் கருச்சிதைவு அல்லது கருத்தடை அனுமதிக்கக்கூடாது என்பது ஆன்மீக தர்க்கமாகும்.

### நவீன உலக கருத்து

உள உடல் சம்பந்தமான அறிஞர்கள், வைத்திய நிபுணர்கள் மேற்படி கருத்தை ஏற்க மறுக்கின்றனர். ஆன்மீக தர்க்கமானது விஞ்ஞான ரீதியில் எந்த ஆதாரத்தையும் முன்வைக்காமல் கலாசாரத்தைப் பின்பற்றுவது ஏற்றதல்ல என்கின்றனர்.

### இலங்கையில் கருச்சிதைவு பற்றிய சட்டம்

இலங்கை தண்டனைச் சட்ட கோவையில் 303ஆம் பிரிவு ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இல்லாமல் வேறு



எந்தக் காரணத்திற்காகவும் கருவைச் சிதைப்பது குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டு கடூழியச் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். கருவுறும் நிலையில் கருச்சிதைவு செய்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை, அபராதம் இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

ஒரு பெண்ணின் சம்பந்தமில்லாமல் கருச்சிதைவு செய்தால் செய்தவருக்கு ஆயுள் தண்டணை விதிக்கப்படும்.

பொதுவாக கருச்சிதைவு இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படலாம். செயற்கையாக மேற்கொள்பவை ஆபத்தான விளைவுகளையும் சில வேளைகளில் ஏற்படுத்துவதுண்டு. செயற்கையாக அதாவது தங்களுடைய விருப்பத்துடன் கருக் கலைப்பைச் செய்து கொள்வது எமது நாட்டில் சட்ட ரீதியாகவும் சட்டரீதியற்ற முறையிலும் நிகழ்கிறது. பொதுவாக எமது நாட்டில் சட்டத்திற்குப் புறம்பான வகையிலேயே இக்கருக்கலைப்புக்கள் நடக்கின்றன. ஆனால் அவைகள் வெளிப்படுவது குறைவு. கருக்கலைப்பின்போது கருவைச் சுமந்த பெண்ணுக்கு உயிராபத்து ஏதேனும் நிகழும் பட்சத்தில்தான் அந்த தகவல் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படும். திருமணத்திற்கு முன் தவறான

> ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இல்லாமல் வேறு எந்தக் காரணத்திற்காகவும் கருவைச் சிதைப்பது குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு மூன்று ஆண்டு கடூழியச் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

உறவுகள் மூலம் ஏற்படும் கரு, பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு உருவாகும் கரு மற்றும் திருமணம் முடித்த தம்பதியரினால் தமக்கு இது தேவையற்ற குழந்தை எனும் எண்ணும் பட்சத்தில் இது போன்ற க்ருக்கலைப்புக்களைச் செய்கின்றனர். இவை சட்டத்திற்குப்புறம்பானது என்பதை விளக்குகின்றார் டி. சொய்ஸா மகப்பேற்று மருத்துவ மனையின் வைத்திய நிபுணர் இராமநாதன் ஸ்ரீஸ்கந்தா.

### கருச்சிதைவு ஏன் ஏற்படுகிறது?

கர்ப்பம் தரித்த எல்லா கர்ப்பங்களும் ஒன்பது மாதங்கள் (வாரங்கள்) முடிவுற்று அதன் விளைவாக குழந்தை பிறப்பதில்லை.

சில நேரங்களில் கர்ப்ப காலத்திற்குள்ளேயே தானாக கலைந்து விடுகின்றது. இதனையே கருச்சிதைவு என்கிறோம். இது தானாக ஏற்படும் கருச்சிதைவு ஆகும். பொதுவாக இந்தக் கருச்சிதைவு 26 வாரங்களுக்கு முன்னதாகவே ஏற்படுகின்றது. பெரும்பாலும் கருவுற்ற முட்டையில் கோளாறு இருப்பின் கருச்சிதைவு ஏற்படுகின்றது.

ஒரு சில வேளைகளில் அவ்வாறு குறையுள்ள கருமுட்டை தொடர்ந்து வளர்ச்சியடையும் போது உருக்குலைந்த அல்லது ஊனம் போன்ற குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்க நேரிடுகின்றது. ஒரு வகையில் பார்த்தால் இதுபோன்ற பிறப்புக்களைத் தடுப்பதற்கான உரிய ஆதாரங்களுடனான கருக்கலைப்பை சட்டம் ஏற்கின்றது. மற்றும் வளரும் கரு தாயின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பட்சத்திலும் இக்கருக்கலைப்பை சட்டம் ஏற்கின்றது. மலேரியா, சிபிலிஸ், கர்ப்பவதி கீழே விழுவதினால்

கிருஷ்ணி கந்தசாமி இஃபாம்

இனப்பெருக்க உறுப்புக்களில் உள்ள பிரச்சினைகளின் காரணமாகவும் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. சில நேரங்களில் கருப்பையில் வளரவேண்டிய கரு கருப்பையில் அல்லாமல் கருவகத்திற்குச் செல்லும் குழாயில் வளர்ச்சியடைவதால் ஒரு கட்டத்தில் அதன் இயக்கம் தடைப்பட்டு கருச்சிதைவு ஏற்படுகின்றது. கருப்பை அல்லாத பகுதியில் ஏற்படும் கருமுட்டையினால் ஏற்படும் கர்ப்பமானது பாதியிலேயே கருச்சிதைவு அடைகின்றது.

இவை இயற்கையாகவே ஏற்படும் கருச்சிதைவாகும்.

இலங்கையில் நன்நோக்கத்துடன் கருச்சிதைவு செய்ய இடம் இருக்கிறது. ஆயின் அவர் தண்டனையில் இருந்து தப்ப ***நன்நோக்கம்*** என்பதற்கு நீதிமன்றம் கொடுக்கும் விளக்கத்தைப் பொறுத்தே அவரது தண்டனை தங்கியுள்ளது.

இலங்கையில் கருச்சிதைவு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருப்பினும் இலங்கை மக்களின் கலாசாரப் பின்னணி அதற்கு இடமளிக்காமல் இருப்பதால் தற்போதைக்கு கருச்சிதைவுக்கு இலங்கையில் இடமளிக்கப்படமாட்டாது எனக் கொள்ளலாம்.

பாதுகாப்பற்ற கருக்கலைப்பின் விளைவினால் ஆண்டுதோறும் 68ஆயிரம் பெண்கள் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள் என்னும் அதிர்ச்சியூட்டும் தகவலை உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

## வலிகிழக்கு பிரதேச செயலர்

### ஒருங்கிணைப்பு, விவசாய குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மற்றும் விவசாயக் குழுக்கூட்டம் என்பன தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறமாட்டாது எனவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கருத்தில் கொள்ளுமாறு வலி கிழக்கு பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (6-4)

## ஜெய்க்கா குழுவினர் யாழ். வருகை

யாழ். மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி, கூட்டுறவு, நீர் விநியோகம் மற்றும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய ஜப்பானைச் சேர்ந்த ஜெய்க்கா நிறுவனத்தின் குழுவினர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு நாளை திங்கட்கிழமை வருகை தரும் இக் குழுவினர் 4 நாட்கள் இங்கு தங்கியிருந்து பல்வேறு துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து ஜெய்க்கா நிறுவனத்தினூடான அபிவிருத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வர். (ச-5)

# வீதி புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(அல்வாய்)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட இரண்டு முக்கிய வீதிகளான கல்லூரிவீதி, விஸ்வகுல வீதி ஆகியவற்றில் நேற்று சனிக்கிழமை முதல் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் பருத்தித்துறை கல்லூரி வீதி நீண்டகாலமாக உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருப்பதுடன் அங்கு மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் அமைந்துள்ளன.

மேலும் இவ்வீதியால் பாடசாலை பேரூந்து சேவை மற்றும் 751 இலக்க பேரூந்து சேவை ஆகிய போக்குவரத்து சேவைகள் இடம் பெறுவதுடன் அதற்கு ஏதுவாகவே இவ்வீதிகள் சற்று அகலமாக்கப்பட்டு கல்லடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விஸ்வகுல வீதி ஒழுங்கை கடந்த 15 ஆண்டு காலமாக திருத்தப்படாமல் இருந்தமையை சுட்டிக்காட்டியதை அடுத்து அவ்வீதியை திகிரி சந்திவரை செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறைநகரசபைச்செயலாளர் அ. அ. நடராஜா தெரிவித்துள்ளார். (6-4-19)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

டெங்கு ஒழிப்புத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி செஞ்சிலுவைச் சங்கத்தினர் இலகு வேலைத்திட்ட பயனாளிகளுடன் இணைந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி வளாகத்தை சிரமதானம் செய்யும் பணியை இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க செயலாளர் லயன். கா. சற்குணதேவன் தெரிவித்துள்ளார். (6-4-29)

## விழிப்புலனிழந்தோர் சம்மேளன பிரதிநிதிகளுடனான சந்திப்பு

யாழ். விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களுக்கும் ஸ்ரீலங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஓர் சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இச் சந்திப்பின் போது கொழும்பிலிருந்து வருகை தரும் ஸ்ரீலங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனப் பிரதிநிதிகள் குழுவினால் விழிப்புலனற்ற அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி சுயதொழிலினை மேம்படுத்தும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நிதியுதவியும் வழங்கவுள்ளதாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன் தெரிவித்துள்ளார். (6-30)

## தற்காலிக இணைப்பிலுள்ள அதிபர், ஆசிரியர்களுக்கு

(சாவகச்சேரி)

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது இடம்பெயர்ந்து தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் தற்காலிக இணைப்பிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்களை நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

அத்துடன் தங்களது முதல் நியமனக் கடிதம், தற்காலிக இணைப்புக் கடிதம் இறுதியாக பெற்ற சம்பளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணம் என்பனவற்றையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6-4-29)

## ஆசிரிய உதவியாளர்களுக்கான ஒன்றுகூடல்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சினூடாக ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்களை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு யாழ். மாவட்ட ஆசிரியர் உதவியாளர் சங்க தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (6-4)

## இராசி பலன்

10.01.2010
(மார்கழி 26, ஞாயிற்றுக்கிழமை)
தசமி முற்பகல் 8.12 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.18 மணிவரை
இராகுகாலம் 5.03- 6.33 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், எடுத்த காரியம் தாமதமாகும், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம். |
| இடபம் | களஸ்திர நன்மை, திடீர் பயணம். எடுத்த கருமங்கள் கைகூடும். தன வருவாய். |
| மிதுனம் | சுகவாழ்வு, போசன நன்மை. கலந்துரையாடல், காரிய நன்மை. |
| கடகம் | புத்திரரால் கவலை, பணக்குறைவு. தொழில் சிந்தை,நண்பர்கள் உதவி. |
| சிங்கம் | ரோகநிலை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, தெய்வ சிந்தை. |
| கன்னி | மனோதைரியம், முயற்சி கைகூடும், உறவினர் வருகை நற்கீர்த்தி. |
| துலாம் | போசன சுகக்குறைவு, சகோதரர் உதவி, பணவிரயம், ரோகநிலை. |
| விருச்சிகம் | வெகுமானம், மாதர் நட்பு. முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை. |
| தனுசு | காரிய தாமதம், உஷ்ண வியாதி. சுபசெலவு, சோம்பல் நிலை. |
| மகரம | முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம், மனமகிழ்ச்சி. |
| கும்பம் | பிறர் உதவி, தொழில் மேன்மை, காரிய சித்தி, அதிகாரம். |
| மீனம் | வேலைச்சுமை, கட்டுப்பாடு. நிலை மாற்றம், போசன சுகம். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

# 'விரலின் விலை

"என்னப்பா... விரலில் கட்டுப் போட்டிருக்கிறாய்?"

"வயலில் ஒயில் எஞ்சின் ஓடிக் கொண்டிருந்தது. தவறுதலாக விரலைக் கொடுத்துவிட்டேன். அதுதான்..."

"நீயாவது தவறுதலாக விரலைக் கொடுத்துவிட்டேன் என்கிறாய். அது பரவாயில்லை. சிலபேர் வேண்டுமென்றே விரலைக் கொடுக்கிறார்களாமே, கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"நிஜமாவா?"

"ஆமாம். பத்திரிகையில் பார்க்கவில்லையா? குஜராத் மாநிலத்தில் உள்ள ஜவுளி நகரம் ஆமதாபாத்"

"அங்கே சமன்புரா என்று ஒருபகுதி. அந்த ஊரில் பலருக்கு விரல் இல்லையாம்."

"ஏன்... ஏதாவது வியாதியா?"

"அப்படி இல்லை... ஜவுளி ஆலையில் வேலை செய்யும் போது விரல் போய்விட்டது என்றால் தொழிலாளர் காப்புறுதித் திட்டம் மூலமாகப் பணம் கிடைக்குமாம்."

"எவ்வளவு?"

"15 ஆயிரம் ரூபா வரைக்கும் கிடைக்கும். இந்தப் பணத்துக்காக சிலர் வேண்டுமென்றே விரலைக் காயப்படுத்திக் கொண்டு அல்லது துண்டித்துக் கொண்டு பணத்தை வாங்கி விடுகிறார்களாம்"

"அது எப்படி வலிக்காதா?"

"வலி மரத்துப் போறதுக்குத்தான் ஊசி இருக்கே... அதைப் போட்டுக் கொள்கிறார்களாம்."

"இதென்ன... விநோதமாக அல்லவா இருக்கிறது!"

"அப்படித்தான் இருக்கிறது. காலம் அந்த அளவுக்குக் கெட்டுப் போய்விட்டது."

"அது எப்படியாச்சும் போகட்டும். அவர்கள் தான் புத்தியில்லாமல் அப்படிச் செய்கிறார்கள் என்றால்... நாமும் அப்படி நடக்கக்கூடாது."

"நீ உன் விரலைக் கவனி! நல்லவேளை உன்னுடைய இடது கைவிரல் மிஷினில் மாட்டியிருக்கிறது வலது கையாக இருந்தால் சாப்பிடக்கூட கஷ்டமாகப் போயிருக்கும்."

"வலது கைதான் மாட்ட இருந்தது. நான்தான் புத்திசாலித்தனமாக அதை எடுத்துவிட்டு இடது கையைக் கொடுத்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 230 | 250 | 240 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 170 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 130 | 160 | 150 |
| லீக்ஸ் | 90 | 120 | 100 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 180 | 200 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 180 | 200 | 120 |
| கத்தரி தம்புள்ள | 130 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 45 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# இலங்கை அகதிகள் சிலருக்கு பிரிட்டனில் குடியேற வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை அகதிகள் இரண்டு நாட்களாக மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்னர் பிரிட்டனின் குடியேறுவதற்கு அகதிகள் சிலருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதமும், 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதமும் பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாகச் செல்ல முயன்றவேளை பிரிட்டனில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் இவர்கள் இடையிடையே உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்நிலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் பேரவையினால் மின்னஞ்சல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. இதனையடுத்து தமது உண்ணாவிரதப் போராட்டத்தை அவர்கள் இடை நிறுத்திக் கொண்டனர். இந்நிலையில் பிரிட்டனுக்குள் செல்வதற்கு அகதி அந்தஸ்து கோரலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த புதன் கிழமை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி அகதி அந்தஸ்து பெறுவார்கள் என ஐக்கிய நாடுகள் அகதிகள் பேரவையின் மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கை அகதிகள் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்றவேளையில் கைது செய்யப்படுகின்றமை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## வடக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கு

# உலக வங்கி 65 மில்லியன் டொலர்களை வழங்கத்திட்டம்

(கொழும்பு)

வடக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உலக வங்கி 65 மில்லியன் டொலர்களை வழங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மக்களுக்கான அவசர புனர்வாழ்வு உதவியாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களை மீளவும் அவர்களது சொந்த இடத்தில் தங்க வைப்பதற்காக இந்தப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இடம்பெயர்ந்த மக்கள் தங்களது வாழ்வாதாரத் தொழில்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் ஐந்து கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் உலக வங்கியிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# யுத்தத்தின் மூலம் நிறைவேற்ற முடியாதவற்றை அரசியல் ரீதியாக நிறைவேற்ற த.தே. கூ. முயற்சி

## அமெ. பௌத்த விகாரையின் பீடாதிபதி

(கொழும்பு)

யுத்தத்தின் மூலம் நிறைவேற்ற முடியாதவற்றை அரசியல் ரீதியான அணுகுமுறைகளின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள த.தே.கூ. முனைப்புக் காட்டி வருவதாக அமெரிக்காவின் பௌத்த விகாரையின் பீடாதிபதி வல்பொல பியனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச புலி வலையமைப்பின் அழுத்தம் காரணமாக இன்று ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பதாகவும் வடக்கு – கிழக்கை இணைத்தல், உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் உள்ளிட்ட முக்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார் எனவும் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்க கிறீன் கார்ட் உரிமையுடைய நபர் ஒருவர் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# சட்டவிரோத பதாதைகள் இன்னமும் அகற்றப்படவில்லை

## கண்காணிப்பு அமைப்புகள்

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பிரச்சார பதாதைகள் இன்னமும் அகற்றப்படவில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றம் சுமத்தி யுள்ளன.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு குறித்த கண்காணிப்பு அமைப்புக்கள் மீண்டும் அறிவித்துள்ளன.

சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் பதாதைகள் 48 மணித்தியாலயத்தில் அகற்றப்படு மென உத்தரவாதம் அளிக்கப்பட்ட போதிலும் இன்னமும் சில பிரதேசங்களில் குறித்த பதாதைகள் மற்றும் சுவரொட்டிகளை காணக் கிடைப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி, குருணாகல், கொழும்பு, கம்பஹா, பதுளை, மாத்தறை, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் இவ்வாறான சட்ட விரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பாக ஆளும் கட்சியினரின் சட்ட விரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளே அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(சாவகச்சேரி)

டெங்கு நுளம்பின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரப் பிரிவினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நகர மறுசீரமைப்பு ஆலோசனைச் சபை, நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபை ஆகிய சபைகளின் அங்கத்தவர்களுடன் சனசமூக நிலையப் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், நிர்வாகிகள், நூலக அபிவிருத்தி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு டெங்கு ஒழிப்புக்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்குமாறு சபையின் நிர்வாக உத்தியோகத்தர் செல்வி வி. சிவக்கொழுந்து கேட்டுக்கொள்கின்றார். (6-4-29)

# வசந்தம் தொலைக்காட்சிச் சேவையினால் சக்தி தொலைக்காட்சி சேவைக்கு இடையூறு

## நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

வசந்தம் தொலைக்காட்சி சேவையினால் சக்தி தொலைக்காட்சி சேவைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்குச் சொந்தமான வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசை ஏற்கனவே பல ஆண்டுகள் இயங்கி வந்த சக்தி தொலைக்காட்சி அலைவரிசை எண்ணில் ஒளிபரப்புச் செய்யப்படுவதாகவும் சக்தி தொலைக்காட்சிச் சேவையின் ஒளிபரப்புக்களைத் தடை செய்யுமாறு விடுக்கப்பட்டுள்ள உத்தரவினை நீக்குமாறும் தெரிவித்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, தொலை தொடர்பு ஆணையகம், சுயாதீன தொலைக்காட்சிச் சேவை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1991ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்பில் எம். ரீ.வி. நிறுவனம் ஈடுபட்டு வருவதாகவும் 2003 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் சக்தி தொலைக்காட்சி சேவை தனது ஒளிபரப்பை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பினை மேற்கொண்ட யூ.எச். எப். 25 அலைவரிசையில் வசந்தம் தொலைக்காட்சியின் பரீட்சார்த்த ஒளிபரப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவ்வாறு தமது ஒளிபரப்பிற்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்படுவது ஊடக ஒளிபரப்புத் தார்மீகங்களுக்குப் புறம்பானதென சக்தி தொலைக்காட்சியின் சார்பில் ஆஜராகும் சட்டத் தரணிகள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர். (6)

# பாப்பரசரின் இலங்கைக்கான தூதுவர் மன்னார் விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாப்பரசரின் இலங்கைக்கான தூதுவர் ஜோசப் ஸ்வோட் நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மன்னாருக்குச் சென்ற பாப்பரசரின் தூதுவரை மன்னார் ஆயர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மன்னார் செபஸ்தியார் ஆலயத்துக்குச் சென்ற தூதுவர் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள செபவழிபாட்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார். இவ்வழிபாட்டு நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (6)


# அறிவித்தல்

வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மனிப்பாய் பட்டின உப அலுவலகம்.

**ஆதனப் பெயர்மாற்றம் – ஆதன இல.165E, யாழ். வீதி, வட்டாரம் –3**

ஆதன இல. 165E, யாழ். வீதி, 3ஆம் வட்டாரத்தில் உள்ள ஆதனத்திற்கு செல்வநாயகம் பாலச்சந்திரன் என்பவர், குறித்த ஆதனம் தமக்கு உரிமையானது என உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து சோலைவரி பதிவேடுகளில் தனது பெயரை உட்புகுத்துவதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து செல்வநாயகம் பாலச்சந்திரன் என்பவரின் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(C-4174)



# 27ஆம் நாள் நினைவு அஞ்சலி



## நிஷானி இரவிபாலன்

அவனி மகிழ எம் அகம் மலர ஆண்டு ஏழு (07) வவுனியா மண்ணில் ஒளி வீசி உலா வந்த எம் செல்வி *நிஷானி* யாழ். மண்ணில் காலடி வைத்து ஏழாம் நாள் (07ஆம்) எம்மை எல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு இறைவி பதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி உற்று வந்து எமக்கு ஆறுதல் கூறி அவரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கட்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமும் தொலைநகல் மூலமும் கடிதங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எம் கனத்த இதயத்துடனான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

11-01-2010 நாளை திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் இதனைத் தொடர்ந்து பகல் 11.30 மணிக்கு ***நல்லூர் துர்க்கா மணிமண்டபத்திலும் / வவுனியா கோவில்குளம் சிவன் கோவில் அருளகத்திலும்*** இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்கின்றோம்.

*இல: 347/05,*
*கோவில் வீதி, நல்லூர்.*

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(இ)

**குடும்பத்தினர்.**

## சினி தகவல்கள்

### ஆக்ஷன் சேரன்



இதுவரை மென்மையான ஹீரோ வாக நடித்து வந்தார் சேரன். இப்போது தனது பாதையை மாற்றி ஆக்ஷன் ஹீரோவாகிறார். மிஷ்கின் இயக்கும் படத்தில் அவர் சண்டைக்காட்சிகளிலும் நடிக்கவுள்ளார். கல்பாத்தி அகோரம் இப்படத்தை தயாரிக்கிறார். இப்படத் துக்காக பிரெஞ்ச் தாடி, நீண்ட தலைமுடி என கெட் அப் மாற்றியிருக்கிறார் சேரன்.

### கவர்ச்சிக்கு டாடா!



பில்லா படம் மூலம் நயன் தாரா என்றாலே கவர்ச்சி என்ற முத்திரை விழுந்தது. இப்போது அந்த இமேஜிலிருந்து விடுபட விரும்புகிறாராம் நயன். தமிழில் ஆர்யாவுடன் பாஸ் என்கிற பாஸ்கரன் படம் மட்டுமே அவருக்கு உள்ளது. இதில் அவர் கவர்ச்சியாக ஒரு காட்சியில் கூட நடிக்கவில்லை என்கிறது பட தரப்பு.

அதே போல மலையாளத்தில் திலீப் ஜோடியாக பாடி கார்ட் படத்தில் நடித்துள்ளார். இதிலும் கவர்சசி இல்லையாம். கவர்ச்சியாக நடித்த பல படங்கள் சரியாக ஓடாததால் இந்த முடிவாம்.

### இயக்கம் எப்போது -அஜித்



இதுவரை நடிப்பில் மட்டுமே கவனம் செலுத்திய அஜீத். இப்போது கதை விவாதத்திலும் கலந்து கொள்கிறார். சரன் இயக்கத்தில் அவர் நடித்துள்ள 49 ஆவது படம் "அசல்". இதன் டைட்டிலில் கதை, திரைக் கதை, இயக்கத்தில் ஒத்துழைப்பு என்று அஜித் பெயர் இடம் பெறுகிறது.

தனியாக ஒரு படத்தை இயக்குவது எப்போது? ஒரு படம் நல்லா வரவேண்டுமென்றால் குழுவாக செயற்படுவது அவசியம். நான் நடிக்கிற படம் சிறப்பா வர என்னென்ன செய்யவேண்டுமோ அதை செய்கிறேன். நடிகனா ஒரு நிலையான இடம் கிடைத்திருக்கு. தனியா ஒரு படம் இயக்க சந்தர்ப்பம் கிடைத்தால் கண்டிப்பாக பின்வாங்க மாட்டேன் என்கிறார் அஜித்.

### த்ரிஷாவுக்கு கல்யாணம்



த்ரிஷாவின் தாயார் த்ரிஷா வுக்குக் கல்யாணம் செய்து பார்க்க ஆசைப்பட்டு த்ரிஷா வுக்குப் பொருத்தமான மாப்பிள்ளையைத் தேடி வருகிறார். அதற்கு த்ரிஷா இருமனதுடன் சம்மதம் தெரிவித் துள்ளார். அதனால் கையில் இருக்கும் படத்தை முடிக்க த்ரிஷா மும்முரமாக இருக்கிறாராம்.

**த்ரிஷாவைப் பற்றி சில**




*முழுப் பெயர் : த்ரிஷா கிருஷ்னன்*
*பிறந்த நாள் : 04 மே 1983*
*வேலை : நடிப்பு மோடல்*
*பெற்றோர் :கிருஷ்னன், உமா கிருஷ்னன்*
*பிறந்த இடம் : சென்னை*
*பள்ளி : சர்ச் பார்க் சென்னை*
*கல்லூரி : எத்திராஜ் சென்னை*
*பட்டம் : 1999 இல் மிஸ் சென்னை, 2001இல் மிஸ் இந்தியா மற்றும் பெஸ்ட் ஸ்மைல்*
*மொழி : தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, பிரான்சு*
*பொழுது போக்கு, இசை, படிப்பு, நீச்சல்*
*த்ரிஷாவின் பிளாஸ்பேக்*

முதலில் விளம்ர நடிகையாக உலா வந்தார். அப்புறம் ஃபல்குனி பதக் 'என்ற இசை ஆல்பத்திலும் நடித்திருக்கிறார். பின்னர் இயக்குநர் பிரவின்காந்த் இயக்கத்தில் வெளிவந்த 'ஜோடி' என்ற படத்தில் தோன்றிய த்ரிஷா (இப்படம் 1999இல் வெளிவந்தது) அதன் பின்னர் அமீர் இயக்கிய 'லேசா லேசா' படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமானார்.

பின்னர் 'மௌனம் பேசியதே', 'சாமி', 'கில்லி' என அடுத்தடுத்த படத்தின் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துவிட்டார். அனைத்து மொழிகளிலும் வரவேண்டிய படத்தையும் சேர்த்து மொத்தம் 37 படங்கள் தந்துள்ளார்.

### அருண்விஜய் மொட்டை

#### அம்மா கதறல்




எந்தப் படத்துக்காகவும் மொட்டை அடித்ததில்லை அருண் விஜய். இப்போது 'மாஞ்சா வேலு' படத்துக் காக மொட்டையடித்து நடித் துள்ளார். இந்த விடயத்தை அமெரிக்காவில் தங்கியிருக்கும் அவரது அம்மா முத்துக் கண்ணு விஜயகுமாருக்கு யாரோ சொல்லி விட்டனர்.

உடனே அருணுக்கு போனில் பேசிய அவர் கதறிவிட்டாராம். உன் பத்து வயதில் கோயிலுக்குப் போய் மொட்டை போட்டது. இப்ப சினிமாவுக்காக மொட்டை போட்டிருக்கிறியாமே? அப்படி இல்லாம நடிக்க முடியாதா? என்று கேட்டிருக்கிறார். மொட்டை போட்டிருப்பதன் அவசியத்தைச் சொன்ன பின்னர் தான் சமாதானம் ஆனாராம் அருணின் தாயார்.

## கந்தகோட்டை

திரை விமர்சனம்



காதலை வெறுக்கும் நாயகனும் காதலை ஆதரிக்கும் நாயகியும் ஒரு நேர்கோட்டில் சந்திக் கிறார்கள்.

அவர்களிடையே காதல் நுழைகிறது. அது வெற்றி பெற்றதா இல்லையா என்பதே 'கந்தகோட்டை'.

கொடுத்த கதாபாத்திரத்தை அழகாக செய்தி ருக்கிறார். நகுலன் காதலை வெறுப்பதிலும் காதலில் அதிவேகம் காட்டும்போதும் எக்ஸ்பிரஷன் எக்பிர ஷராக பயணிக்கிறது.

சின்ன அசின் பூர்ணா பாட்டுக்கு மட்டும் என்றில் லாமல் கதையோடு வசீகரிக்கிறார்.

ஆபாசத்தை குப்பையில் வீசிவிட்டு காமெடி செய்திருக்கும் சந்தானம் ஜொலிக்கிறார்.

வில்லன் சம்பத் கவனத்தை ஈர்க்கிறார்.

யுகபாரதியின் 'கலகலகல கந்தகோட்டை' கபிலன் எழுதியுள்ள உன்னை காதலி என்று சொல்லவா.... 'விவேகாவின் 'எப்படி என்னுள் காதல் வந்தது.... 'பாடல்களில் தினா பளிச்செனத் தெரிகிறார்.

சுப்ரீம் சுந்தரின் சண்டைகளும் இ.கிருஷ்ணசாமியின் ஒளிப்பதிவும் பரபரக்கிறது.

காதலும் காதல் சார்ந்த காட்சிகளுமாக திரைக்கதை அமைத்து கலகலப்பாக கொண்டு செல்கிறார்.

இயக்குநர் சக்திவேல் படம் எப்படி? என்ற கேள்விக்கு பதில் சொல்கிறது இயக்குநரின் இன்ஷியல்.

## விஜய் மகனுக்கு பாடிய அஜித் மகன்



அஸ்வத் பி.அஜித்

குடை விளம்பரத்தில் ஜிங்கிள்ஸ் பாடி, "கரண்ஸி"மலையாளப் படத்தில் பாடகர் ஆனவர் அஸ்வத். பி.அஜித்.

"பசங்க", "துரோகி" படங்களைத் தொடர்ந்து "ஐடியல் பனியன்ஸ்" பாடினார். அதைக் கேட்ட விஜய் ஆண்டனி, "வேட்டைக்காரன்" படத்தில் உடனடி வாயப்புக் கொடுத்தார். சங்கர் மகாதேவன் குரலில் வரும் "நான் அடிச்சா தாங்க மாட்ட.." பாடலில் இடம்பெறும் சிறுவன் குரலைப் பாடியவர் அஸ்வத்.

விஜய் மகன் சஞ்சய்ஜேசனுக்கு குரல் கொடுத்துள்ள அஸ்வத் ஆசான் மெமோரியல் பள்ளியில் 6 ஆம் வகுப்பு படிக்கிறார். ட்ரினிட்டி கல்லூரியில் பியானோ வகுப்பில் தரம் 2 இற்கு தேர்வாகியுள்ள இவரது பியானோ குரு குரு தாஸ்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையில் "மௌனராகம்" தெலுங்குப் படத்தில் சின்ன வயது ஹீரோவுக்கான பாடலைப் பாடியிருக்கிறார் அஸ்வத்.

பள்ளிவிழாக்களில் பாட்டுப் போட்டியில் முதலிடம் பெறும் இவர் ஓட்டப் பந்தயத்தில் மூன்றாம் இடத்துக்குள் வந்து விடுவாராம்.

எந்தமொழிப் பாடலைப் பாடினாலும் தாய்மொழியின் சாயல் வந்துவிடாமல் கவனமாக இருப்பது இவரது ஸ்பெஷல்.

அஸ்வத்தின் அம்மா வினிதாவும் பாடகி.இவரது அப்பா அஜித் முன்னணி சினிமா டிரம்மராக இருக்கிறார். என்ன வியூகங்களே தலையங்கத்தைப் பார்த்து "தலை" அஜித் என நினைத்துவிட்டீர்கள்.



சஞ்சய் ஜேஸன்

## தனுஷை காதலிக்காத ஸ்ரேயா... ஸ்ரேயாவை காதலிக்கும் தனுஷ்!





வழக்கமான சினிமாவில் முக்கோணக் காதலென்றால் ஒரே பெண்ணை இருவர் காதலிப்பார்கள்; அல்லது ஒரு ஆணை இரு பெண்கள் காதலிப்பார்கள். ஒருவர் காதலைப் பற்றி இன்னொருவருக்குத் தெரியாமல் கடைசிக் கட்டத்தில் தெரியவந்து என்ன முடிவெடுக்கிறார்கள் என்பது கிளைமாக்ஸாக இருக்கும்.

இந்த வழக்கத்தை மாற்றி புதுக்கதை சொல்லவருகிறார் ஜெமினி ஃபிலிம் சர்க்கியூட்டின் "குட்டி" இயக்குநர் மித்ரன் ஆர்.ஜவஹர்.

"யாரடி நீ மோகினி" வெற்றிக்குப்பின் தனுஷுடன் ஜவஹர் கை கோர்க்கும் இரண்டாவது படம் இது.அதேபோல் " திரு விளையாடல் ஆரம்பம்" வெற்றிக்குப் பின் தனுஷும் ஸ்ரேயாவும் காதல் கோர்க்கும் படமும் இதுதான்.தெலுங்கில் சூப்பர் ஹிட்டான " ஆர்யா" வின் தமிழ் ரீமேக்கான 'குட்டி' படம் பற்றி ஜவஹர் பேசினார்.

"இந்தப் படத்தில தனுஷுக்கு புதுவிதமான கரக்டர். அவருக்கென்று ஒரு தனி உலகம் இருக்க. தனக்கென்று ஒரு சென்டிமென்ட், தனக்கென்று ஒருலொஜிக் தனி வழியில் போகிற அற்புதமான வாழ்க்கை வாழ்பவர் அவர்.

அதே விடயம் அவர் காதலுக்குள்ளயும் ரிஃப் எக்ட் ஆகும்போது ஏற்படும் இரசாயன மாற்றங்கள் தான் கதையோட சுவாரஸ்யத்தை உறுதி செய்கிறது.

அவர் ஸ்ரேயாவைக் காதலிக்கிறார். ஆனா ஸ்ரேயாவோ இரண்டாவது ஹீரோவான தியானைக் காதலிக்கிறாங்க அதை தனுஷுடமும் சொல்கிறார்.

ஆனா அதற்கு, "நீங்க என்னைக் காதலிக்காம இருக்கலாம். யாரை வேணுமானாலும் காதலிக்கலாம். அதுக்கு உங்களுக்கு சுதந்திரம் இருக்கு. அதேபோல உங்களைக் காதலிக்கிறதும் என்னோட முழு சுதந்திரம். அதைத் தடுக்கிற உரிமை உங்களுக்கு இல்லை..ன்.ன தன்னோட "லந்து லொஜிக்"கைச் சொல்லி ஸ்ரேயாவை காதலிக்கிறதை நிறுத்தாம தொடர்கிறார். இப்படி ஒருத்தரோட காதல் ஒருத்தருக்குத் தெரிஞ்சே போய் என்ன ஆகிறது ஜாலியான, ஆனா புதுவிதமான தளத்தில் போற காதல்படம் இது.

இதல தனுஷ் புத்தம்புதுசா இருப்பார்.முக்கியமா அவரோட காஸ்ட்யூம்ஸ் .அவரோட உடைகளை ஒரு காஸ்ட்யூமர் வடிவமைச்சிருக்கிறது இதுதான் முதல்முறை. அதேபோல் தான் ஸ்ரேயாவும். இதுவரை ஸ்ரேயான்னா ஒரு கிளாமர் டால்தான்.

மாடர்ன் டூயட் பாடலும் இல்லைங்கிறதும் இதில புதுமைதான். அதனால ஸ்ரேயா வைப் பாக்கிறதுக்கு ரொம்பவும் அடக்கமாகவும் அழகாகவும் தெரிவாங்க.இதெல்லா எதுக்கு என்றால் ஸ்ரேயாங்கிற நடிகை தெரியாம " கீதா"ங்கிற கரக்டர் மட்டுமே தெரியணும் கிறதுக்காகத்தான்.

தனுஷுக்கு இணையா நடிப்பில் ஸ்கோர் பண்ண வாய்ப்பு இருந்ததால், ஸ்ரேயா அட்ட காசப்படுத்திருக்கிறார். ஒரிஜினல் படத்தோட எந்தப் பாதிப்பும்இல்லாம, தனுஷும் கூட மென்மையான இடத்தில் அத்தனை சாஃப்டாவும், வன்மையான இடங்கள்ல உணர்ச்சி கரமாகவும் வந்துஇன்னொரு பரிமாணத்தில தெரிவார். கரக்டர் படி அவர் ஒரு அனாதைங்கிறதால, அவர் வாழந்துவரும் தொடர்மாடியில் இருக்கும் அத்தனை இளைஞர்களும் அவருக்கு நண்பர்களாக இருப்பாங்க. அதற்குப் பொருத்தமான குழந்தைகளை நடனம் உட்பட சகல திறமைகளையும் கணக்கில் வைத்தே தேர்ந்தெடுத்தோம்.

நண்பர்கள் ஆட்டத்தில தனுஷ்கிட்டயே மல்லுக்கட்டுவானுங்க. அதற்கு சமமாக தேவிஸ்ரீ பிரசாத் மியூசிக்ல பின்னியிருக்கார்.

தம்பி தனுஷுக்காகவும்,சிஷ்யனான எனக்காகவும் நாங்க கேட்டுக்கிட்டபடி ஒரு பாடலை எழுதித் தந்திருக்கார் செல்வராகவன். விவேகா, தாமரை பாடல்களோட இந்தப் பாடலும் ஹிட் லிஸ்ட்ல இடம்பிடிக்கும்.

ஒரு தலைக் காதலை மையமாக வைத்து வரும் அந்தப் பாடல் இப்படி ஆரம் பிக்கும்..." நீ காதலிச்ச பொண்ணு காதலிக்க லேன்னா கவலைப்படாதே..." இளைஞர் களின் மனதைப்பிடிக்கிற அட்வைஸ்தான்...!



# என்றும்... எங்கும்... இல்லாத கட்சித் தாவலைக் கண்டு களிக்கலாம்




மஹிந்த ராஜபக்ஷ

நாட்டில் பொருளாதாரப் பஞ்சம் என்பதை விட நேர்மையில் ஏற்பட்டுள்ள பஞ்சமே மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

அதுவும் அரசியலில் நேர்மையீனம் தலைதூக்குமாக இருந்தால், அந்த நாடு உருப்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போகும்.

இந் நிலைமை இப்போது இலங்கைத் தீவில் சர்வசாதாரணமாகிவிட்டது.

தேர்தல் காலத்திலும், தேர்தல் முடிவுக்குப் பின்னரும் கட்சி தாவும் கூட்டத்தால் அரசியலின் ஒழுக்கத்திற்கு பங்கம் ஏற்பட்டு விடுகின்றது.



செல்லச்சாமி

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குத் தாவுதல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறுதல் என்ற தடுமாற்றம் அரசியல்வாதிகளிடம் இருப்பதானது, பொதுமக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் மீதான அவநம்பிக்கையை ஏற்படுத்தும்.

அரசியலில் யாரை நம்புவது என்ற கேள்வி; போராட்ட அமைப்புக்களிலும் இருந்ததென்பதை மறுப்பதற்கில்லை.

எங்கும், எதிலும் பித்தலாட்டம், நேர்மையீனம் என்பதன் அடிப்படை அனைத்தும் பதவியாசையும், பொருளாதாரத் தேடலுமாகும்.

இலங்கையில் வேகமெடுத்து வரும் இத் துரதிர்ஷ்ட நிலை, எதிர்காலத்தில் ஜனநாயகப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த நாட்டின் மூத்த அரசியல்வாதிகளின் வரலாறு பற்றி ஆராயும் போதெல்லாம் அவர்களிடம் நிறைந்திருந்த நேர்மை, நியாயம், பக்கம் சாராமை என்பனவற்றின் உயர்பெறுமானத்தை அறியமுடிகின்றது.

தந்தை செல்வநாயகம், எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா போன்ற வர்கள் அரசியலில் நேர்மைத்தனம் உடையவர்களாக இருந்தனர்.

அவர்கள் தங்களின் சொத்துக்களை நாட்டிற்கும், அரசியலுக்கும் வாரிக் கொடுத்தனர்.

ஆனால் இன்று மேடையேறி முழங்கி ஊழல் புரியும் அவையாக அரசியல் மாறியுள்ளது.

ஆட்சிப்பீடம் முதல் சாதாரண கட்சித் தொண்டர் வரை நாட்டைச் சுரண்டும் சுய நலத்தோடு செயற்படுவதால், அரச அமைப்புக்களிலும் ஊழல் நிரந்தர நியமனம் பெற்றுவிட்டது.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் காலம். மஹிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் இரு பிரதான வேட் பாளர்கள், இருவரில் ஒருவரே ஜனாதிபதியாவார் என்பது உறுதி.

## காணத்தவறாதீர்கள் புதிய மெகாத் தொடர் ஜனாதிபதித் தேர்தலை பார்த்திருங்கள்

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்க தோற்றுப் போக ஒரு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றார்.

மஹிந்தவின் வெற்றி தமிழ்மக்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தமையால் ஏற்பட்டதென்பதை மறைத்து ரணில் விக்கிரமசிங்க ஆளுமையற்ற அரசியல் தலைவர் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி விட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைகள் மஹிந்தவின் பக்கம் தாவிக்கொண்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலம் இருண்டுவிடும் என்று கூறுமளவிற்கு அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்கள் மஹிந்தவின் பக்கம் பாய்ந்து கொண்டாலும் ரணில் விக்கிரமசிங்க நிதானம் இழக்காமல் காலம் வரும் வரை காத்திருந்தார்.

### தாவியவர்கள் தன்மானம் இழந்தனர்

ரணில் விக்கிரமசிங்கவை தூக்கியெறிந்துவிட்டு மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் தாவியவர்கள் தாம் எதிர்பார்த்தபடி கௌரவம் பெறமுடியவில்லை.

மஹிந்தவின் சகோதரர்கள் அவர்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்கவில்லை. கட்சி தாவியவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் இயலாமல் தத்தளித்தனர்.

அந்தத் தத்தளிப்பு ஐக்கிய தேசியக் கட்சி மீட்சி பெறுவதற்கு உதவியது. வெற்றியோ, தோல்வியோ நம் வீட்டில் இருப்பதுதான் சுயகௌரவத்தைப் பாதுகாப்பதற்கான வழியென்ற முடிவில் காத்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்திக் குழுவினர் ஜனாதிபதித் தேர்தலின் அறிவிப்போடு தங்கள் தாய்க் கட்சியிடம் திரும்பக் காத்திருக் கின்றனர். அதுமட்டுமல்ல தாங்கள் தத்தளிப்பிலிருந்து கரைசேர்வதற்கான படகாக அவர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

### தேர்தல் நெருங்க கட்சித்தாவல் விஸ்வரூபமெடுக்கும்

சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு என்பதை வெளிப்படையாக - துணிவோடு தெரியப்படுத்திய பெருமை மனோ கணேசனையே சாரும்.

தமிழர் தரப்பில் தெளிந்த அரசியல் சிந்தனையுடைய அரசியல்வாதியாக மனோ கணேசனைத் தமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிவை எடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடித்ததும், முடிவு



சிவகீதா பிரபாகரன்

எடுத்த போது பத்துக்கு எட்டு என்ற பரிதாப நிலை இருந்ததும் மறுக்க முடியாத உண்மை.

கூட்டமைப்புக்குள் குழப்பம் என்ற உண்மையைப் பகிரங்கப்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக் கையும் இழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்கால அரசியல் ஸ்திரத்தை கட்டியெழுப்புவதற்காக அதிகம் உழைக்க வேண்டியிருக்கும்.

அதேநேரம் கூட்டமைப்பிற்குள்ளும் கட்சித்தாவல் உண்டெனப் பொதுமக்கள் பேசிக்கொள்கின்றனர்.

கடலில் மிதக்கும் பனிக்கட்டியின் பெரும்பகுதி கடலில் அமிழ்ந்திருப்பது



எஸ்.பி.திஸநாயக்க

போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலும் சிலர் மறைந்திருக்கும் பனிக்கட்டிபோல வெளி யில் தெரியாமல் கட்சி தாவியுள்ளனர் என்ற பேச்சும் பரவலாக உள்ளது.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதித்



ரணில் விக்கிரமசிங்க

தேர்தல் முடிந்து பொதுத் தேர்தல் நடக்கும் போது யார் யார் கட்சி தாவியிருந்தார்கள் என்ற உண்மைகளை மேடை ஏறி முழங்கப் பலர் காத்திருக்கின்றனர்.

இருந்தும் இவை எதுவுமே கட்சித் தாவலை தடுக்கமாட்டா.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோடு இருந்தவர்கள் சரத் பொன்சேகாவின் பக்கம் தாவுவதற்கும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்கள் மஹிந்தராஜபக்ஷவின் பக்கம் தாவுவதற்கும் சமசந்தர்ப்பம் உண்டா? என்ற கேள்வி எழுமாயின், இங்கு தான் சிக்கல் காணப்படுகின்றது. ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவர்கள் ரணிலின் தலைமையை எதிர்த்து மஹிந்தவுடன் சேர்ந்து அமைச்சுப்



அர்ஜுன ரணதுங்க

பதவிகளையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கு இப்போது மஹிந்தவை விட்டுப்பிரிந்துசெல்ல வேண்டுமென்ற விருப்பம் உள்ளது. அந்த விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் விலகிக்கொண்டமை சாதகமாக அமைவதால்,

**விதுரன்**

பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டு. அதேநேரம் எஸ்.பி. திஸநாயக்க இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விட்டு இறுதியில் மஹிந்தவின் பக்கம் தாவிக் கொண்டார்.

யார் யார் எந்தப் பக்கம் தாவினாலும் அவர்கள் தண்டனை அனுபவிக்கமாட் டார்கள். ஏனெனில் மீண்டும் கட்சி தாவு வதற்கு அவர்களுக்கு "மனச்சாட்சி" என்பது உட்பட எந்தத் தடையும் இல்லை.



# ஆலடி மாநாடு

## வாத்திமாரை வெளியில் விட்டு பூட்டுப்போட்ட 'தேர்தல்' கூட்டம்

பிள்ளையார் கோயிலில் சனங்கள் . முந்தின மாதிரி கோயிலில சனங்களைக் காணப்போறானந்தமாக இருக்கு. வன்னி முகாம்களில இருந்து நேற்றுத் தானே கொஞ்சப் பேர் வந்தவியள்....

கடைக்காரக் கந்தையரும் பண்டிதரும் கதைத்துக்கொண்டிருந்தனர்.

இவையளுக்கு வேணும்..... இது நல்ல பாடம்...

விவசாய மன்னர் தன் பாட்டில் கூறிக்கொண்டு ஆலடி மாநாட்டிற்கு வந்தார்.

என்ன விவசாய மன்னர் வரும்போதே இவையளுக்கு வேணும் எண்டு ஆனந்தத்தோட சொல்லுறியள் என்ன விஷயம்.பண்டிதர் கேட்க, விவசாய மன்னர் சிரிப்பை அடக்க முடியாமல் வயிற்றைப்பொத்தினார்.

இஞ்சை விவசாய மன்னர் முதலில கதையைச் சொல்லிப்போட்டு சிரியும். பண்டிதர் கடுப்பாகக் கூறினார். விவசாய மன்னர் சிரிப்பை ஒருவாறு அடக்கிக் கொண்டு கதையைத் தொடர்ந்தார்.

பண்டிதர் ஐயா! ஜனாதிபதித் தேர்தல் நடக்கப்போகுதல்லோ....! விவசாய மன்னர் இழுக்க அது எல்லோருக்கும் தெரிஞ்ச விஷயம் தானே! பண்டிதர் மறுமொழி தந்தார்.

பண்டிதர் ஐயா ஜனாதிபதித்தேர்தலில எப்படி வாக்களிக்க வேணும் எண்டு விளக்கக்கூட்டம் நடக்குதல்லோ...

அதுக்கென்ன விளக்கக்கூட்டம் நடத்தினால் தானே ! தேர்தலில வாக்களிக்கிற நடைமுறை பற்றிச் சொல்லிக்கொடுக்கலாம். விதானையர் விஸ்வலிங்கம் கூறினார்.

அதைத்தான் சொல்லுறன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில 07.01.2010 அன்று முற்பகல் 11.30 மணிக்கு விளக்கக்கூட்டம் நடத்தினவியள். எங்கட ஆசிரியர் மாரைத்தெரியாதே!

அவையள் பத்துப் பதினைந்து நிமிடம் எண்டு தாமதித்துப் போக வாக்களிப்பைப் பற்றி விளக்கம் கொடுத்தவர் குமாரசாமி மண்டத்தின்ர முகப்பு வாசல் கதவை ஆமப் பூட்டுப்போட்டு பூட்டிப் போட்டார்.

விவசாய மன்னர் சொல்லி முடிப்பதற்குள் ...

இதென்ன கதை விளக்கக்கூட்டத்திற்கு வந்தவியளை வெளியில விட்டுக் கதவைப் பூட்டினதோ! பண்டிதர் பரமசிவம் பதட்டமடைந்தார்.

பண்டிதரின் பதட்டம் விவசாய மன்னருக்குப் பிடிக்கவில்லை.

ஏன் பண்டிதர் நீங்கள் வாத்தியாரா இருந்ததால பொத்தொன்று கோபம் வருகுதோ!

இஞ்சே விவசாய மன்னர் இது தொழில் கோபம் அல்ல. கூட்டத்திற்கு வாத்திமார் பிந்தி வந்தால் அவையள அடுத்த கூட்டத்திற்கு வரச் சொல்லுறது தானே. பண்டிதர் பரிந்துரைத்தார்.

ஓம் பண்டிதர் நீங்கள் சொல்லுறதும் சரி தான். ஆனா....

என்ன ஆனா.... விதானையார் இடைமறித்தார். கிண்டுக் கொளிச் பிள்ளையள் சொன்னவங்களாம்.

இஞ்ச பாருங்கடா நாங்கள் லேட்டெண்டா எங்களை கேற்றுக்கு வெளியே விடுகிற மாதிரி ஆசிரியர்கள் லேட் எண்டவுடன கேற் பூட்டுப்பட்டுப் போச்சுது. விவ சாய மன்னர் சொல்ல ,

பார்த்தியளோ....

பார்த்தியளோ....

இது போதும் கிண்டுக் கொளிச் பொடியளுக்கு. அவங்கள் இனிமேல் வாத்திமாரை கிண்டல் அடிக்கிறத்துக்கு, பண்டிதர் கோபப் பட்டார்.

பண்டிதரின் கோபத்திற்கு விதா னையார் விசுவலிங்கமும் எதிர்ப்புப் போல, ஏன் பண்டிதர் தேர்தல் விளக்கக்கூட்டம் எண்டு அறிவித்தால் அந்த நேரத்திற்குப் போறது தானே! அழகு. இதில ஆசிரியர் மார் முன் மாதிரியா நடக்கவேண்டாமோ!

விதானையாரும் எதிர்ப்புத் தெரிவிக்க பண்டிதர் கடுப்படைந்தார். விதானையார் எதையும் பொறுப் போட கதைக்க வேணும். ஜனநாயகத் தேர்தலுக்கு பூட்டிய மண்டபத்திற்குள்ளேயே விளக்கம் கொடுக்கிறது. விளக்கம் கொடுக்கிறதில ஜனநாயகம் இருக்க வேணும். யாழ்ப்பாணத்தில வாத்திமா ரெண்டா ஒண்டும் தெரியாதவியள்எண்ட நினைப்போ!

பண்டிதரின் கடுப்பைத் திசை திருப்பும் வகையில் கடைக்காரக் கந்தையர் கதையைத் தொடர்ந்தார்.

அது சரி பண்டிதர் விளக்கக் கூட்டத்தில இருக்கிறவியள் ஆரும் ஒண்டுக்கு இரண்டுக்கு போறதா இருந்தா என்ன செய்யிறது. கந்தையரின் சந்தேகத்தால் ஆலடியில் சிரிப்பொலி.

கந்தையர் தன்ர பக்கம் என்பதை உணர்ந்து கொண்ட பண்டிதருக்கு உசார் கூடியது.

ஏன் கந்தையர் , குமாரசாமி மண்டபத்தில திடீர் எண்டு தீ விபத்து ஏற்பட்டால் பூட்டப்பட்ட மண்டபத்திற்குள்ள இருக்கிறவியளின் கெதி என்ன?

சிவ சிவா.... சிவ சிவா.... பார்த்தியளோ! லேற்றா வந்த வாத்திமாருக்குத் தண்டனை கொடுக்கிறதா நினைச்சு நேரத்தோட வந்த வாத்திமாருக்குத் தண்டனை கிடைச்சல்லோ போயிருக்கும்.



நல்ல காலம் பூட்டிய மண்டபத்திற் குள்ள விபரீதம் நடக்காமல் போயிற்று. இனிமேலாவது சொந்தக் கொதிப்புகளைத் தள்ளி வைச்சிட்டு பொது உறவைப் பலப்படுத்த வேணும் விதானையார் விசுவலிங்கம் தொகுப் புரை வழங்கினார்.

விதானையாரின் தொகுப்புரையிலும் பண்டிதருக்குத் திருப்தி இல்லை.

நேரமுகாமைத்துவம் எண்டால் அது எல்லோருக்கும் தான். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு ஆளுநர் வந்த போது எங்கட வாத்திமாரும் அதிபர்களும் கழுத்துப்பட்டிகளைக் கட்டிக்கொண்டு எவ்வளவு நேரமாகக் காத்திருந்தினம். இதுக்கெல்லாம்.... பண்டிதர் இழுக்க ....

பண்டிதர் ஐயா ! அரசியல் கதைச்சா ஆலடிக்கு வாறத்த இண் டையோட விட்டிடுவன் விதானையார் சொல்ல.

அப்ப , விவசாய மன்னர் வெளி யில காத்து நின்ற ஆசிரியர்கள் என்ன சொன்னவியள்.கடைக்காரக் கந்தையர் புதினம் விசாரித்தார்.

அவையள் என்ன சொல்லுறது. நாங்கள் லேட் எண்டதுக்காகக் கேற் றப் பூட்டல்ல. கூட்டத்திற்கு வந்தவி யள் கூட்டம் முடிய முதல் எழும்பிப்போகாமல் இருக்கிறத்திற்காகத்தான் பூட்டுப்போட்டது என்று சொல்லித் தங்களை சமாளித்துக்கொண்டினம். விவசாய மன்னர் கூற ஆலடியில் மீண் டும் சிரிப்பொலி .

சிரிப்பொலியோடு மாநாட்டிற்கு வந்த கடிதங்களை பண்டிதர் புரட்டினார்.

போன ஞாயிற்றுக்கிழமை ஆலடியில் கதைச்ச நேரடி 'ரயல்' விடயத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட சாரதிப் பயிற்சிக் கல்லூரி அசோசியேசன் கடிதம் எழுதியிருக்கு பண்டிதர் சொல்ல, கடிதத்தை வாசியுங்கோ பண்டிதர். கந்தையர் முறுக்கேற்றினார்.

சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும். சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் தகுந்த முறையில் பயிற்சியினை வழங்கிய பின்பு தான் எழுத்துப் பரீட்சைக்கும் செயல் முறைப் பரீட்சைக்கும் பரீட்சார்த்திகளை அனுப்புகின்றார்கள். எம்மிடம் உரிய முறையில் பயிற்சி பெறாத எவரையும் நாங்கள் எழுத்துப் பரீட்சைக்கோ செயல்முறைப் பரீட்சைக்கோ அனுமதிப்பதில்லை. செயல் முறைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள் அல்லது சித்தியடையவில்லை என்பதனை மோட்டார் வாகனப் பரிசோதகரே சகல பரீட்சார்த்திகளுக்கும் அறிவிப்பார். எங்களுக்கு அந்த முடிவினை அறிவிக்கும் உரிமை இல்லை. சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளினூடாக உரிய முறையில் பயிற்சியினைப் பெறுபவர்கள் இலகுவில் பரீட்சையில் சித்தி பெற முடியும், செயலகம் ஊடாக விண்ணப்பித்தால் சாரதி அனுமதிப் பத்திரம் பெறமுடியாது என்பது தப்பான அபிப்பிராயம். சிறந்த முறையில் வாகனங்களைச் செலுத்தக் கூடிய பெருமளவானோர் மாவட்ட செயலகம் ஊடாக விண்ணப்பித்து சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் கடந்த காலங்களில் பெற்றுள்ளனர்.

சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளினூடாக செல்பவர்களும் செயல் முறைப் பரீட்சையில் பலர் சித்தியடையாமல் உள்ளனர். ஒரு சிலரின் தனிப்பட்ட கருத்தோ அல்லது யாராவது ஒரு ஊடகவியலாளரின் கருத்தோ உண்மையாகப் போவதில்லை. சம்பந்தப்பட்டவர் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க் வேண்டும். இவ்விடயத்தில் உரியவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அதனை விட்டு பயிற்சிப் பாடசாலைகளையோ அல்லது மற்றவர்களையோ விமர்சிப்பது உண்மையாகவும் கடமை உணர்வுடனும் செயற்படும் அனைவரினதும் மனதினையும் புண்படுத்தும் என்பதனைத் தாங்கள் அறிவீர்கள்.

நன்றி

JAFFNA DISTRICT
Driver Training School Association
Kandy Road
Jaffna.

கடிதத்தை பண்டிதர் வாசித்து முடிக்க போன ஞாயிற்றுக்கிழமை ஆலடியில் கதைத்தவிடயம் தொடர்பாக எங்கட அரசாங்க அதிபர் ஐயா உடனடியாக நடவடிக்கை எடுத்தவர். விதானையார் விசுவலிங்கம் சொன்னார்.

ஆலடியில கதைக்கிற விடயங் கள் பொதுமக்களின் நன்மை கரு தியது தான். யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கவேணும் என்ற நினைப்பு எங்களிட்ட அறவே இல்லை. விவசாய மன்னர் சொல்ல அதனை ஆமோதிப்பது போல சோமசுந்தரக் குருக்கள் கண்டாமணியை இழுத் தடிக்க மாநாடு கலைந்தது.

ஆத்தன்

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### புரிகிறதா மானிடா?

### தமிழ் இன அவலம்

கருகிக் கிடக்கும் அவலங்களை
கைகட்டி வேடிக்கை பார்க்கிறது
உலகம்
ஒரு வேளை சோற்றுக்கு
ஓயாமல் கை நீட்டி நிற்கிறது
தமிழ் இனம்
காண வேண்டிய விடியலைக்
கன்னத்தில் கைவைத்து பார்க்கிறது
எதிர்காலம்
மொத்தத்தில் கையாலாகாது
கண்ணீரை
இறைத்துக் கொண்டிருக்கிறோம்
இதயத்தால்

கோண்டாவில்
பா.வைஸ்ணவி
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
தரம்:-10

### நஜ்ஜியங்கள்

அப்பா
ஆனந்தகுமாரசுமாமி முகாமில்!
அம்மா
கதிர்காமர் நலன்புரிநிலையத்தில்!
சோதரியொருத்தி
சோன்போர் நிவாரணக் கிராமத்தில்!
கடைசித்தம்பி
காணாமல் போனோர் பட்டியலில்!
கட்டின வீடும் வளவும்
கைவேலிக் கிராமத்தில் ஆநாதையாய்!
நானோ
தடுப்பு முகாமில்!
நாடோ
தேர்தல் பிச்சை கேட்டுத்திரிகிறது
தெருத்தெருவாக!

-பிரியா பரந்தாமன்-

### சகதிக்குள் சல்லாபம்

பேய்கள் மட்டும்
வாழுகின்ற சுடுகாடு!
பிணங்களோடு மட்டும்
இங்கு உறவாடு!

உணர்வு உள்ள மனிதனக்கு
உதவாது-அது
இருந்தால் வேறு ஊர்தேடி
போய்ச் சேரு!

வாய் திறந்தால்
குரல்வளையை கடிப்பார்கள்!
வாசகங்கள் எழுதிவிட்டால்!
விரல்களையே ஒடிப்பார்கள்!

சுதந்திரத்தை கேட்டுப்பார்
கொதிப்பார்கள்!
கொடும் போர் நடத்தி-உன்
கதையை முடிப்பார்கள்!

ஊமைகளாய்
வாழ்ந்தால்தான் மதிப்பார்கள்-நீ
வேற்று மொழி என்றறிந்தால்
மிதிப்பார்கள்!

உனக்கேன்ன வரலாறு
நீ எருமை!
சகதிக்குள் சல்லாபம்
உன் நிலமை!

முல்லை மருதன்
வண்ணார் பண்ணை

# மௌனத்தின் தேடல் -0 2

### ஆறுதல் அளிக்குமா...?

நியாயப் படுத்த முடியாத
உறவுகளின்,
இறப்புக்களைக் கண்டு
இறுகிய இதயங்களுக்கு
அழுகைதான்...
ஆறுதல் அளிக்குமா...?

வ.ச:செல்வராசா



### நீங்கிடுமா எம் நினைவிலிருந்து

யுத்தம் ஓய்ந்து விட்டது
சமாதானம் வந்து விட்டது ஆனாலும்
எம் உறவுகளின்
சிதறிய உடலங்களுடன் நாம்
கதறித் துடித்த அந்த வடுக்களின்
கொடூரம் நீங்கிடமா?

எம்.சந்திரகலா
யோகபுரம்

### துயர் எமக்கே!

எம் உறவுகளின்
இறப்புக்களின் பின்னால்
எங்கள் இதயம் மட்டுமே
அழுது கொண்டிருக்கிறது

வி.சாந்தினி
அச்சுவேலி.

### கதறல்

செல்மழையால் தம்
அன்புச் சகோதரனை
இழந்து கதறும்
இந்த உறவுகளின்
துயரம் இந்த பூமியில்
யாருக்கு புரியும்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
(பருத்தித்துறை)

### மரணமே சென்று விடு

மனத்தில் மரணத்தின் பயம்
மரத்தின் கீழ் மரணத்தின் ஓலம்
முகத்தை துணியால் மறைந்தாலும்,
மனத் துயரை துணியால்
மறைக்க முடியுமா?

கு.நிஸாந்தி
நீர்வேலி

### தீர்க்க தரிசன ஒப்பாரி...?

இயலும் வரை
அழுது விட்டு
இன்னுமொரு
குண்டுவிழ
உன்னோடு-நான் வருவேன்!
என்னவனே...
கொஞ்ச நேரம்
பொறுத்திடு!

அருள்செல்வம்
மண்கும்பான்

### முடியவில்லை

முடியவில்லை இனியும்
அழுவதற்கு -நாளைய
உலகில் நாமும்
ஒன்றாய் இருப்போம்
என்று கூறி தோட்டாக்களுக்கு
நீ இரையானதை எண்ணும் போது
இனி நம் கதி...?

P.உதயா
யாழ்.பல்கலைக்கழகம்

### முக மூடி வாழ்க்கை

அழித்தவனின் முகமும் தெரியவில்லை
அழித்தவனின் முகமும் புரியவில்லை
தியாகத்திற்காக மடிந்தவர்கள்
வாழும் போது அணிந்த முகமூடிகளை
மடிந்த பின்னர் கூட அகற்ற முடியவில்ல
ஏனோ தெரியவில்லை?...

கே.ராஜீவன்
யாழ்.பல்கலைக்கழகம்

## சங்குநாதம்

### யுத்தத்தின் பக்கம்

உடல்கள் சிதறிவிழ
உயிர்கள் பதறிஅழ
மரங்கள் சரிந்து விழ
மனங்கள் எரிந்து விழ
நடந்த யுத்தத்தின்
நிகழ்ந்த பக்கமா?-இல்லை
மடிந்த உறவுகளின்
ஒடிந்த சிறகுகளா?

ச.மதுசூதனன்
கூளாவடி
பருத்தித்துறை.

# மௌனத்தின் தேடல்- 03



அன்பு வாசகர்களே !
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.
-ஆசிரியர் -

## மஹிந்தவின் தேர்தல் பிரசாரத்துக்காக

# அரச சொத்துக்கள் விரயம் செய்யப்படுவதாக முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவிற்காக அவரது சகோதரரும் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சருமான சமல் ராஜபக்ஷ, அரசாங்க சொத்துக்களை விரயம் செய்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை துறைமுக ஊழியர் பொது சங்கத்தின் தலைவர் சந்திரஸ்ரீ மகாகமகே இந்தக் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அதில் 300 துறைமுக ஊழியர்களும், 70 வாகனங்களும் மஹிந்த ராஜபக்சவின் பிரசாரங்களுக்காக பயன்படுத்தப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த ஊழியர்களின் பெயர்களையும் வாகன இலக்கங்களையும் தொழிற்சங்க தலைவர் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊழியர்கள், பிரசார மேடைகளை அமைப்பதற்கும், ஏனைய விடயங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றனர் எனவும் இதற்காக இவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன எனவும் இவை தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும் எனவும் தொழிற் சங்க தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார். (6)




# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சாதனை வெற்றி ஈட்டப்படும்

## ஜெனரல் சரத்பொன்சேகா

(கொழும்பு)



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது சாதனை வெற்றி ஈட்டப்படும் என எதிர்க் கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு அமரர் ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த வெற்றிச் சாதனையை தாம் இம்முறை முறியடிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பேருவளைப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 45 வீதமான வாக்குகளையே பெற்றுக் கொள்வார் என ஜனாதிபதி செயலகம் நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக குறிப்பிட்ட அவர் வாக்காளர்களை வாக்களிப்பில் கலந்து கொள்ள விடாது அதன் மூலம் தேர்தலில் வெற்றியீட்ட அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் மக்கள் எவ்வித சந்தேகமும் இன்றி இம்மாதம் 26 ஆம் திகதி வாக்களிப்பில் கலந்து கொள்வார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சேறு பூசி வரும் உயர் இராணுவ அதிகாரிகள் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எனவும் குறிப்பாக அரசாங்க ஊடகங்களில் தோன்றி தமக்கு சேறு பூசும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வரும் இராணுவ உயரதிகாரிகளில் பலர் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்களுக்கு எதிரான வன்முறை, பொருட்களை களவாடுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் குறித்த உயர் இராணுவ அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## தபால் மூல வாக்களிப்பை கண்காணிக்க

# 2 தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கு அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பை கண்காணிப்பதற்காக இரண்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கு அனுமதி வழங்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில் பவ்ரல் மற்றும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு மத்திய நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு தபால் மூல வாக்களிப்பை கண்காணிக்க தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

கண்காணிப்புக் குழுக்கள் சார்பில் தலா ஒரு பிரதிநிதியும் வேட்பாளர்கள் சார்பில் ஒரு பிரதிநிதியும் வாக்களிப்புகளை கண்காணிக்க அனுமதிக்கப்படவுள்ளனர். (6)

# பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் கலைஞர்களுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் கலைஞர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சில கலைஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சுயாதீன தொலைக்காட்சியில் இரவு 7.30 மணிக்கு நீண்ட காலமாக ஒலிபரப்புச் செய்யப்பட்டு வரும் பபா என்ற சிங்கள தொலைக் காட்சி நடாகத்தின் கதாநாயகியான உபேக்ஷாஸ் வர்னமாலி தொடர்ந்தும் தமக்கு வாய்ப்புக் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என தெரிவித்துள்ளார்.

தாருண்யட ஹெடக் என்ற விளம்பரங்களில் கலந்துகொள்ள மறுத்து, ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்தன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்கள் முடிவடையும் வரையில் படப்பிடிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தயாரிப்பு நிர்வாகக் குழுவினர் தம்மிடம் அறிவித்துள்ளதாகவும் குறித்த கதாபாத்திரத்தில் இருந்து தாம் நீக்கப்படக்கூடிய சாத்தியங்கள் வெகுவாக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் அசோக ஹந்தகம சிறில் தர்மவர்த்தன, பிந்துஹெவர் உள்ளிட்ட பல கலைஞர்கள் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு "ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கையின் சட்டங்கள் நாட்டின் முதல் குடிமகனின் பரப்பினரால் சீர்குலைக்கப்பட்டு குப்பைக்கூடையில் வீசப்பட்டுள்ளதாக பிரபல சிங்கள நடிகர் சிறில் தர்மவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாஜ் விடுதியில் நடைபெற்ற ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவான கலைஞர்கள் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (6)

# காவல்துறையினர் ஜனாதிபதிக்கு ஆதரவாக செயற்படுகின்றனர்

## சரத்தின் தேர்தல் காரியாலயம்

(கொழும்பு)

காவல்துறை அதிகாரிகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு சார்பாக செயற்பட்டு வருவதாக பொன்சேகாவின் தேர்தல் காரியாலயத்தைச் சேர்ந்த தெமியா ஹுருல்லே தெரிவித்துள்ளார்.

காவல்துறை தலைமையகத்தைச் சேர்ந்த காவல்துறையைச் சேர்ந்த சில சிரேஷ்ட அதிகாரிகள் இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளருக்கு ஆதரவளித்து வருவதாகவும், இதனால் தாம் பெரும் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் அவர், கடிதம் மூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

நிர்வாக மறுசீரமைப்பு கூட்டங்கள் என் போர்வையில் காவல்துறை உயரதிகாரிகள் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய காவல் துறையினர் இவ்வாறு பக்கச்சார்பாக செயற்பட்டு வருகின்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (6)

# காவல்துறையினரின் நடவடிக்கைகளை பலவீனப்படுத்த முயற்சி

## காமினி நவரட்ன

(கொழும்பு)

காவல்துறையினரின் நடவடிக்கைகளை சில அரசியல் கட்சிகள் பலவீனப்படுத்த முயற்சி மேற்கொண்டு வருவதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிக் காவல்துறை மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக காவல் துறையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பலவீனப்படுத்தும் வகையில் சிலர் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.


காவல்துறையினர் பக்கச்சார்பின்றி தமது கடமைகளை முன்னெடுத்து வருவதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற காவல்துறையினர் துணை போக மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் காரியாலயத்தினால் காவல்துறையினருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்பு தெரிவிக்கும் நோக்கில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (6)

## பொது வேட்பாளராக

# பொன்சேகாவை களமிறக்கியமை ஓர் இடைக்காலத் தீர்வுத் திட்டமே

## ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை தேர்தலில் களமிறக்கியமை ஓர் இடைக்கால தீர்வுத் திட்டமே என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்கு இடைக்காலத் தீர்வுகளை எட்டும் நோக்கில் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிரந்தரத் தீர்வுத் திட்டமொன்றை எட்ட வேண்டுமாயின் அனைத்து இன சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென தெரிவித்த அவர் யுத்த காலத்திலும் யுத்தத்திற்கு பின்னரான காலத்திலும் அரசாங்கம் வடக்கு மக்கள் தொடர்பில் சரியான கரிசனையுடன் இயங்கத் தவறியுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் மக்களும் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் இடம்பெயர் மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது தங்களது சுயஇலாப நோக்கங்களை பூர்த்தி செய்வதில் அதிக அக்கறை காட்டி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளதோடு இடம்பெயர் மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொதிகளில் சில அமைச்சர்களுக்கு பத்து வீத தரகுப் பணம் கிடைக்கப் பெறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டில் ஜனநாயகம் படிப்படியாக வீழ்ச்சி அடைந்து செல்கின்றதெனவும் இடம்பெயர் முகாம்களில் மக்கள் எதிர்நோக்கி வரும் சொல்லொணா துயரங்கள் காரணமாக வடக்கு மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# இந்துசமய வளர்ச்சிக்கு பாடுபட்ட 'இறைபணிச் செம்மல்' மகேஸ்வரன்

தமிழ் மக்களுக்காக தன்னுயிரை நீத்த அஞ்சா நெஞ்சன் "இறைபணிச் செம்மல்" தியாகராசா மகேஸ்வரனின் பிறந்தநாள் நினைவு தினம் இன்றாகும். 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி பிறந்த மகேஸ்வரன் தமிழ் மக்களுக்கு தொண்டு செய்வதற்காகவே பிறந்தார் எனக் கூறினால் மிகையாகாது.

யாழ். கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவும் இந்து கலாசார அமைச்சராகவும் திகழ்ந்த மகேஸ்வரன் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்த பணிகள் அளப்பரியன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களை புனரமைக்க உதவியதுடன் பல ஆலயங்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கினார்.

எங்கு எப்போது சென்றாலும் தமிழ் மக்களுக்காக அடுத்து என்ன செய்யலாம், அவர்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகாணலாம் என்ற எண்ணமே அவரது மனதில் காணப்படும். இன நெருக்கடியின் உச்சக்கட்டத்தின் போது எரிக்கப்பட்ட செல்வச்சந்நிதியான் ஆலய தேரினை புதிதாக உருவாக்கிக் கொடுத்த பெருமை மகேஸ்வரனையே சாரும்.

ஐ.தே.க.வின் ஆட்சிக் காலத்தில் எரிக்கப்பட்ட தேர் அதே ஆட்சியில் மீள நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதில் மகேஸ்வரன் உறுதியாக இருந்தார். அதற்கென நிதி ஒதுக்கி தேரை வீதியுலா வரச்செய்தார். காரைநகர் ஈழத்து சிதம்பரம் உட்பட பல ஆலயங்களுக்கு அவர் தொண்டு செய்தார். அவரது பிறந்த தினமான இன்று அன்னாரது நினைவாக பெருமளவு நிதி செலவழித்து நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள "மகேஸ்வரன் மணி மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்துசமயம் தழைத்தோங்க அரும்பாடுபட்ட மகேஸ்வரன் எம்.பி. இறைபணிக்காக செய்த சேவையினைப் பாராட்டி தருமபுரம் ஆதீனம் "இறைபணிச் செம்மல்" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது. இந்தக் கௌரவ பட்டத்திற்கிணங்க இறக்கும் வரை இறைபணிச் செம்மலாகவே அவர் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. இரண்டாவது உலக இந்து மாநாட்டினை அரும்பாடுபட்டு மகேஸ்வரன் நடத்தினார்.

இந்துகலாசர அமைச்சராக பதவி வகித்தபோது தியாகராசா மகேஸ்வரன் ஆற்றிய பணிகள் ஒன்று இரண்டல்ல. நாள் தோறும் நிமிடம் தோறும் பணியாற்றினார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 2ஆவது உலக இந்து மாநாடு நடைபெற்ற போது அது கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது.

மன்னார், திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்புக்கும் உதவிய மகேஸ்வரன் அங்கு கிரமமான முறையில் பூஜைகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருந்தார். அதேபோல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலிலும் பூஜை வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்தார்.

2000 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்து குறுகிய காலத்துக்குள் இந்து கலாசார அமைச்சராக பதவி வகித்த மகேஸ்வரன் மூத்த அரசியல்வாதிகளுக்கெல்லாம் முன்னுதாரணமாக திகழ்ந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு தடவையும், கொழும்பு மாவட்டத்தில் ஒரு தடவையுமாக மூன்று தேர்தல்களில் தொடர்ந்து பெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரான மகேஸ்வரன் இறையடி சேரும் வரை தனது குடும்பத்தை விட நாட்டையும் நாட்டு மக்களையும் நேசித்தார். தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படும் போதும் வகை தொகையின்றி கைதுசெய்யப்படும் போதும், கடத்தப்பட்ட போதும், காணாமல் போனபோதும் துடிதுடித்தார். இத்தகைய அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததுடன் போராடினார்.

அவரது பாராளுமன்ற பேச்சுக்கள் அரசாங்கத்தின் அநீதிகளை புட்டுக் காட்டின. பாராளுமன்றத்தில் பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராக கடும் தொனியில் குரல் கொடுத்தார். " அப்பாவி தமிழ் மக்களுடன் விளையாடாதீர்கள். அவர்களை விடுவியுங்கள்" என குரல் எழுப்பினார்.

கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டபோது அவர்களைச் சென்று பார்வையிட்ட மகேஸ்வரன், தமிழர்களுக்கு ஏன் இத்தகைய நிலை வர வேண்டும் என எண்ணிக் கவலைப்பட்டார்.

கொழும்பில் லொட்ஜ்களிலிருந்து தமிழ் மக்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட போது துடிதுடித்த மகேஸ்வரன், பாராளுமன்றத்தில் தனது மேல் சட்டையினை கழற்றி எறிந்து ஆவேசமாக போராடினார். யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு முதன் முதலில் வெற்றிபெற்ற மகேஸ்வரன், குடாநாட்டில் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்குமாறு கோரி மாட்டுவண்டியில் போராட்டம் நடத்தினார். தமிழ் மக்கள் பாதிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது உயிரையும் துச்சமென மதித்து துணிந்து இறங்கிப் பேராடினார்.

2004 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மகேஸ்வரன் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான போதும் அரசியலிலிருந்து ஒதுங்காது மக்கள் சேவைக்காக தன்னை மீண்டும் அரசியலில் ஈடுபடுத்தினார்.

அன்னாரின் உயிர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவரது நினைவுகள் என்றும் தமிழ் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கும். அன்னாரது பிறந்தநாளான இன்று அவரது ஞாபகார்த்தமாக திறந்து வைக்கப்படும் "மகேஸ்வரன் அமுதசுரபி" மண்டபம் என்றும் அவரது பெயரைச் சொல்லும்.



**எஸ்.சுப்பிரமணியம்**
யாழ்ப்பாணம்

வரலாற்றில் அழியாத இடம்பிடித்துள்ள மகேஸ்வரன், தமிழ் மக்கள் துன்ப துயரின்றி வாழ வேண்டும் என கனவுகண்டார். அந்தக் கனவு விரைவில் நனவாக வேண்டும் என்பதே இன்று அனைவரது வேண்டுதலாகவும் பிரார்த்தனையாகவுமுள்ளது.

# ஏற்றுமதியில் உலகில் முதலிடம் பெறும் சீனா

உலகின் மிகப்பெரிய ஏற்றுமதி செய்யும் நாடு என்கிற இடத்தில் இருந்த ஜேர்மனியை பின் தள்ளிவிட்டு அந்த இடத்தை சீனா கைப்பற்றியுள்ளது.

பிராங்பர்டில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின் படி கடந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில், ஜேர்மனி ஆயிரத்தி ஐம்பது பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்திருக்கிறது.

இதே காலகட்டத்தில் சீனாவானது, இதை விட இருபது பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்ததாக, சீனா வெளியிட்டிருக்கும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

2009 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த இரு நாடுகள் ஏற்றுமதி செய்த பொருட்களின் புள்ளிவிவரங்கள் இந்த நிலையைப் பெரிதாக மாற்றாது என்றே கருதப்படுகிறது.

இந்தத் தகவல்கள் உறுதிசெய்யப்பட்டால், உலக அளவிலான சீனாவின் முதன்மைத்துவம் இதன் மூலம் உறுதி செய்யப்படும் எனவும் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் என்கிற இடத்திலிருக்கும் ஜப்பானை புறந்தள்ளிவிட்டு அந்த இடத்திற்கும் சீனா இவ்வாண்டு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (6)



போலந்து நாட்டில் வைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான பலூன்...

# அமெரிக்காவில் விமான நிலைய கெடுபிடிக்கு 14 நாடுகள் எதிர்ப்பு

அமெரிக்க போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நிர்வாகத்தின் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு தெற்காசிய நாடுகளில் உள்ள பல்வேறு அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் 25 ஆம்திகதி அமெரிக்க விமானத்தை வெடிகுண்டு மூலம் தகர்க்க முயன்ற நைஜீரிய நாட்டுப் பயங்கரவாதியின் கைதுக்குப் பிறகு, அமெரிக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளது.

குறிப்பாக அந்நாட்டின் அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்படடுள்ள. அதன் தொடர்ச்சியாக சமீபத்தில், ஒருவரின் உடல் மற்றும் அவரது பொருட்கள் அனைத்தையும் ஊடுருவி ஸ்கேன் செய்யும் புதிய கருவியையும் விமான நிலையங்களில் அமெரிக்கா பொருத்தியுள்ளது.

தற்போது அமுலாகியிருக்கும் இப் புதிய முறையின் மூலம், ஆப்கான், அல்ஜீரியா, கியூபா, ஈராக், ஈரான், லெபனான், லிபியா, நைஜீரியா, பாகிஸ்தான், சவூதி அரேபியா, சோமாலியா, சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய 14 நாடுகளிலிருந்து வரும் பயணிகள் மட்டும் பரிசோதிக்கப்படடு வருகின்றனர்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து இந் நாடுகளில் உள்ள சாயா சி.டி.சி., மைத்ரி, சக்தி பியர் குழுமம், சீக்கியக் கூட்டமைப்பு, தெற்காசிய அமெரிக்கர்களின் முன்னணி. தெற்காசியர்களின் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய சீக்கியர்கள் உள்ளிட்ட அமைப்புகள் கூட்டறிக்கை விடுத்துள்ளன.

பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமானால் இதுபோன்ற நடவடிக்கைகளை சார்ந்திராமல், மேம்படுத்தப்பட்ட கொள்கைகளை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்தும் வழியைப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# கடும் குளிரில் ஐரோப்பிய நாடுகள்

ஐரோப்பா எங்கும் மிக மோசமான பனிப்பொழிவு ஏற்பட்டு பல இடங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரிட்டன் ஒரு தலைமுறை கண்டிராத கடும் பனியிலும் குளிரிலும் உறைந்து போயுள்ளது.

ஸ்கொட்லாந்திலுள்ள குன்றுப் பிரதேசத்தில் சில இடங்களில் கடந்த வியாழக்கிழமை இரவு 22.3 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை தாழ்ந்து போனது. செயற்கைக்கோள் எடுத்த புகைப்படங்களைப் பார்க்கையில் பிரிட்டன் நிலப்பரப்பு முழுவதுமே வெண் கம்பளம் விரித்தாற் போல் முழுமையாகப் பனியால் மூடப்பட்டிருந்தது. (6)

# யாழ்.மக்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஒரு செய்தி

# யாழ்ப்பாணத்திற்கு ஒரு புதிய யுகம்!



நான் உங்களுக்காக அன்றும் , இன்றும் , நாளையும் என்றும் முன்னிற்பேன். உங்கள் அபிலாஷைகளும், உங்கள் நோக்கமும் நிறைவேற நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.


தற்போது ஒரு ஜனாதிபதித் தேர்தல் உங்கள் முன் வந்திருக்கிறது.

**இழக்கப்பட்ட சந்தர்ப்பங்களை மீண்டும் கிட்டச் செய்யவும். உங்களுக்கு நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்கும் இலங்கையில் ஏனைய பிரசைகள் மத்தியில் சம அந்தஸ்துடன் வாழ்வதற்கான ஒரு சூழலை இந்தத் தேர்தலின் பின்னர் உங்களுக்கு உருவாக்கித்தரவும் நான் உறுதி கூறுகிறேன்.**

இம் முறை ஜனாதிபதித் தேர்தலின் ஒரு பொது வேட்பாளரை நாம் நிறுத்தியமைக்கான பிரதான நோக்கம் மஹிந்த ராஜபக்ஷவின் கொடூர ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, உங்களுக்கும் , நாட்டிற்கும் சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்குவதற்காகவே ஆகும்.

**யுத்தத்தின் காரணமாக நீங்கள் பல வருடங்களாக கொடூரமானதும் கசப்பானதுமான அனுபவங்களுக்கு முகம் கொடுத்தீர்கள். எனினும் தற்போது உங்களுக்கு உடனடி நிவாரணமும் அடிப்படைக் கட்டமைப்புகளும் தேவை என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம்.**

இந்த ஜனாதிபதித்தேர்தலில் குறைந்த பட்சமாக உங்கள் ஜனநாயக சுதந்திரத்தையாவது பெற்றுத் தருவதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தயாராக இல்லை. அரசாங்க தலைவர்களும், அதன் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்திற்கு வரும்போது அரசியல் கூட்டங்களுக்காக உங்களை பலவந்தப்படுத்துவதை நாம் நன்கறிவோம். தேர்தலுக்கு முன்பே தமிழ் மக்களை இவ்வாறு பலவந்தப்படுத்தும் இந்த அரசாங்கம், மீண்டும் ஆட்சிப் பீடமேறுமாயின் என்ன நடக்கும் என்று சற்று சிந்தித்துப்பாருங்கள்.



சரத்பொன்சேகா அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட உடன் உங்களுக்கு ஒரு புதிய யுகத்தை உருவாக்குவோம்.

உங்கள் மொழி , கலாசாரம் மற்றும் மதத்தைப் பதுகாக்கவும், உங்களுக்குப் பொருத்தமான வழி வகைகளில் அவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்குமான சுதந்திரம் உறுதி செய்யப்படும்.

- **ஏ-9 வீதி மக்கள் போக்குவரத்திற்காக 24 மணி நேரமும் திறந்து வைக்கப்படும்.**
- **இடம் பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக நிவாரங்களை பெற்றுக்கொடுப்பதோடு , அவர்களின் பாரம்பரிய நகரம், நிலம் மற்றும் அவர்களின் சொத்துக்களை மீண்டும் பெற்றுக்கொடுப்போம்.**
- **யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தேவையற்ற உயர்பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் அகற்றப்படும்.**
- **பலதரப்பட்ட ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களை வைத்துக் கொண்டு பொது மக்கள் மீது நடத்தும் கெடுபிடிகளை நாம் நன்கறிவோம். சகல ஆயுதக் குழுக்களினது ஆயுதங்களையும் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.**
- **குற்றம் மற்றும் எதுவித சாட்சியங்களும் இன்றி அடைத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளை உடனடியாக விடுதலை செய்வோம். குற்றம் புரிந்தவர்கள் இருப்பின் அவர்கள் அடையாளம் காணப்படின் அவர்களுக்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த இளைஞர் யுவதிகளைப் புனர்வாழ்வளித்து சமூக மயப் படுத்தும் செயற்திட்டம் உடனடியாக மேற் கொள்ளப்படும்.**
- **காணாமல்போன இளைஞர் யுவதிகள் சம்பந்தமாக கண்டறியவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு தகுந்த நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.**
- **பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படும்.**
- **பருத்தித்துறை துறைமுகம் சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்தப்படும்.**

உங்கள் பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை சகல வசதிகளும் கொண்டதாக பாடசாலைகளும் பல்கலைக்கழகமும் அபிவிருத்தி செய்யப்படும்.

சுகாதாரச் சேவை சீரமைக்கப்படுவதுடன் அவை நவீன மயப்படுத்தப்படும்.

புதிய பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குவோம். உங்கள் தொழில், வியாபாரத்தை மேம்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்தித் தருவோம்.

அறிவுப் பாதையில் ஓர் புரட்சி. ‘டிஜிடல்’யுகத்திற்கு ஏற்ற ஓர் இளைஞர் பரம்பரையை உருவாக்கி ஹைதராபாத், பெங்களூர் மற்றும் சென்னை போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற நகரங்களுக்கும் மேலான ஒரு நகரமாக யாழ்ப்பாணத்தை மாற்றியமைப்போம்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும்.

இவை அனைத்தையும் உங்களுக்காக நிறைவேற்றுவேன் என்ற உறுதிமொழியை நான் முன்வைக்கின்றேன்.

எங்களது இந்த செயற்திட்டத்திற்கு அஞ்சிய மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் தற்காலிக அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உங்களுக்கு பொய் வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் வழங்க ஆரம்பித்துள்ளது.

ஏ-9 பாதையைத் திறக்க முடியாது என்றும் இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களை விடுவிக்க முடியாது என்றும் கூறி வந்த இந்த அரசாங்கம் தற்போது உங்கள் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவை அனைத்தையும் செய்து தருவதாக வாக்குறுதி வழங்கி வருகிறது.

இவ்வாறான பொய்வாக்குறுதிகளுக்கு ஏமாந்து உங்கள் எதிர்காலத்தை மேலும் இருளாக்கிக் கொள்ள வேண்டாம்.


அன்றும் இன்றும் என்றும் உங்கள் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படும் நான் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் மஹிந்த ராஜபக்சவின் எதிர்காலத்தை அல்ல, உங்கள் எதிர்காலத்தை பிரகாசமானதாக்கிக் கொள்ளுங்கள் என்பதே. அத்துடன் அச்சமின்றி, தலை நிமிர்ந்து வாழக் கூடிய ஒரு சுதந்திர தேசத்தை உருவாக்குவதற்கு சரத் பொன்சேகா அவர்களுக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு பணிவாக வேண்டிக்கொள்கிறேன்.

**எதிர்வரும் 26ஆம் திகதி அதிகாலை சென்று அன்னப் பறவையின் முன் புள்ளடியிட்டு நீங்கள் விரும்பும் பிரகாசமான ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள்.**

**உங்கள்**
**நம்பிக்கைக்குரிய**
**ரணில் விக்கிரமசிங்க**

(சு/4173)

## சுபீட்சமான ஓர் எதிர்காலத்திற்காக சரத் பொன்சேகா அவர்களுக்கு வாக்களியுங்கள்!



# யாழ்ப்பாணத்துப் பண்பாடு

8

## மறந்தவையும் மறைந்தவையும்



பொன், வெள்ளி முதலியவைகளில் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய ஆபரணங்களைப் பொன் வினைக் கலைஞர்கள் செய்தமை பற்றி ஏலவே குறிப்பிட்டோம். யாழ்ப்பாணத்துக் கைவினைக் கலைஞர்கள் பற்றிப் பல்டேயஸ் குறிப்பிடுவது மிகுந்த அவதானிப்புக்குரியது.

"தந்தம் கருங்காலி முதலியவைகளிலும் பொன், வெள்ளிகளிலும் வேலை செய்வோர் ஒல்லாந்தருடைய வீடுகளில் வந்திருந்து, வேலை செய்து கொடுப்பார்கள். இவர்களுடைய ஆயுதங்கள் மிகச் சொற்பம். ஆயினும் திறமான வேலை செய்வார்கள்."

யாழ்ப்பாணத்திலே மரவேலைப் பொருட்களும் இரண்டு தளத்திலே செய்யப்பட்டன.

சமய கரணத் தேவைகளுக்குச் செய்யப்பட்ட சகடை, சப்பறம், வானம், திருவாசி முதலியன அழகியல் அம்சத்தோடு மாத்திரமன்றி அளவுப் பிரமாணத்தோடும் செய்யப்பட்டன.

வீட்டுத் தளபாடங்களான கதிரை, (நாற்காலி, முக்காலி) மேசை, பெட்டகம் முதலியன, பயன்பாட்டு அடிப்படையையும் அழகியல் அமிசத்தையும் உள்வாங்கிச் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திலே பெரும்பாலும் வசதியானவர்களிடம் உபயோகத்திலே இருந்த பண்பாடுசார் மரவேலைப் பொருளாகப் பெட்டகத்தினைக் குறிப்பிடலாம்.

பல்வேறு அளவுகளில், பல்வேறு அமைப்பில் பல்வேறு வகையான வேலைப்பாடுகளுடன் பெட்டகங்கள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்து வீட்டுப் பாவனைப் பொருட்களில் பெட்டகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கக்கூடிய வகையிலே பலம் பொருந்தியதாகவும் பெட்டகங்கள் இருந்தன. பெரியளவிலான பெட்டகத்தின் மேலே ஒருவர் படுத்து உறங்கலாம். இன்று மிக அருகிப்போன பெட்டகப் பயன்பாடு ஒருகாலத்திலே யாழ்ப்பாணத்தில் முக்கியம் வாய்ந்ததாக இருந்தது என்பதை இன்றைய இளந்தலைமுறையினர் அறியமாட்டார்கள்.

மரவேலைப் பொருட்களின் முக்கியமான அம்சங்களில் வீட்டுக் கதவு நிலை, யன்னல் முதலியனவும் குறிப்பிடக்கூடியவை. இந்திய, இலங்கை, போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய பாணிகளில் மரச்சிற்ப வேலைப்பாடுகள் யாழ்ப்பாணத்திலே இருந்தன எனக் கூறப்படுகின்றது. இவற்றின் எச்ச சொச்சங்கள் சிலவற்றை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

புழங்கு பொருட்கள் அல்லது பயன்பாட்டுப் பொருட்களின் அழகியல் அமிசம் பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுவதை இவ்விடத்திலே சுட்டிக் காட்டலாம் என்று எண்ணுகின்றேன்.

"........ பெட்டி, பாய், தளபாடம், தட்டம், விளக்கு, மாலை என வருவன. இவற்றுக்குக் கலை மாத்திரமே என்ற ஒரு தனிப்பரிமாணம் மட்டுமே இருக்காது. இவை பயன்பாட்டுப் பொருட்கள்தான். ஆனால் இவற்றின் அழகில், கவர்ச்சியில், வடிவில் தான் அவை பூரணத்துவம் பெறுகின்றன என்னும் திருப்தியுணர்வு இவற்றின் பயன்பாட்டில் முக்கியமானதாகும்... யாழ்ப்பாணத்தின் இத்தகைய கலைகள் பற்றிய பட்டியலே நம்மிடம் இல்லை. அதாவது யாழ்ப்பாணத்தின் 'கைப்பணிக்கலை' பற்றிய விரிவான, தெளிவான அறிவு நம்மிடம் இல்லை"

கைப்பணிக்கலை பற்றிய அறிவு நம்மிடம் இல்லாமற் போனமைக்கு முக்கிய காரணம் யாழ்ப்பாணத்துச் சாதி முறைமையே எனலாம். கைவினைக் கலைஞர்கள் கலைஞர்களாக நோக்கப்படாது அடிப்படையில் தொழிலாளர்களாகவே கருதப்பட்டனர். பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வந்த கைப்பணிக்கலை குலத்தொழிலாக வரையறுக்கப்பட்டிருந்தது. இதனால் வெவ்வேறு சாதியாரிடம் இக் கைப்பணிக்கலை பரிமாறப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. இது எமது பண்பாட்டின் பலவீனத்தையே புலப்படுத்துகின்றது.

போக்குவரத்து

பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக அமையும் போக்குவரத்துச் சாதனங்களும், பாதைகள் தெருக்களும் பொருள்சார் பண்பாட்டின் பாற்பட்டவையே எனலாம். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் போக்குவரத்துக்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு. இந்த வகையிலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்துச் சாதனங்கள் பற்றியும் போக்குவரத்துப் பாதைகள் பற்றியும் அவற்றோடு ஒட்டிய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் நோக்குவது மிகவும் முக்கியமானது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் போக்குவரத்துச் சாதனங்களாக மாட்டு வண்டி, குதிரைவண்டி, றிக்ஷோ, வள்ளம், தோணி (வத்தை) முதலியவற்றைத் தொடர்ந்து மோட்டார் வண்டி, புகை வண்டி ஆகியன பயன்படுத்தப்பட்டன.



அன்றைய போக்குவரத்து சாதனமான மாட்டுவண்டில்

கால்நடையாகப் பாதசாரிகளாகப் பிரயாணம் செய்யும் வழக்கமே ஆரம்பத்தில் பெருவழக்காக இருந்தது. இவ்வாறு பயணிப்பவர்களை வழிப்போக்கர்கள் என்று அழைக்கும் வழக்காறும் உண்டு.

கால்நடையாகப் பயணம் செய்பவர் கள் சுமந்துவரும் சுமைகளை இறக்கி வைத்து இளைப்பாற வீதியோரங்களில் சுமைதாங்கியும் மடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. பாதசாரிகள் இளைப்பாறுவதற்காக நிழல் தரு மரங்களும் வீதியோரங்களில் வளர்க்கப்பட்டிருந்தன.

சுமைதாங்கியுடன் கிணறு அல்லது கேணி, குளம் என்பனவும் அமைந்திருக்கும். வழிப்போக்கர்கள் மாத்திரமன்றி மாட்டுவண்டியிற் பயணிப்போரும் இவ்விடங்களிலேயே மாட்டை அவிழ்த்துக்கட்டி நீர் பருக விட்டு ஆறிச் செல்வது வழக்கம். இவ்விடங்களில் வண்டில் மாடுகளும் மேய்ச்சல் முடிந்து வரும் மாடுகளும் நீர் அருந்தித் தினவெடுக்கவென ஆவுரோஞ்சுதறிகளும் நாட்டப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் ஆவுரோஞ்சு தறிகளையும் சுமைதாங்கிகளையும் ஆங்காங்கே காணலாம். அவை பயன்பாடின்றி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வழிப்போக்கர்களுக்கும் கால்நடைகளுக்கும் பயன்படும் பொருட்டு கிணறு, குளம், கேணி, சுமைதாங்கி, மடம் முதலிய அமைக்கப்பட்டமை எமது பண்பாட்டின் சிறப்பான அமிசம் எனக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்து வீதியோர மடங்கள் இளைப்பாறுவதற்கும் பயன்பட்டமை உண்மையே. நெல்லியடியில் அமைந்திருந்த மடத்திலிருந்து குடியரசு, கொம்யூனிசக் கருத்துக்கள் பற்றிய உரையாடல்கள் இடம்பெற்ற



அன்று போக்குவரத்து செய்பவர்கள் இளைப்பாறும் தெருமூடி மடம் இன்று கம்பீரமாக பருத்தித்துறையில்

தாகக் கூறப்படுகின்றது. இன்றும் ஆறுகால்மடம், மருதனார்மடம், பூதர்மடம், கந்தர்மடம், நாய்வேலர்மடம் முதலான இடப்பெயர்கள் தெருவோர மடங்கள் இருந்தமையை நினைவூட்டுகின்றன. நாய்வேலர்மடம் இன்று நாவலர்மடமாகப் பெயர்மாறியது எமது பண்பாட்டின் ஒரு பரிமாணமே எனலாம்.

மடப் பண்பாட்டில் தெருமூடிமடம் மிகவும் முக்கியமானது. வடமராட்சியில் நாமறிய இரண்டு இடங்களிலே தெருமூடி மடங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று இப்போது இல்லை. மற்றையது பருத்தித்துறை தும்பளைவீதியில் பசுதீஸ்வரர் ஆலயத்திற்கு அண்மையிலே உண்டு. இத்தெருமூடி மடத்தின் அருகிலே கிணறு, சுமைதாங்கி, ஆவுரோஞ்சுத்தறி ஆகியன உள்ளன. இத்தெருமூடி மடத்தினைப் பற்றிப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை குறிப்பிடுவதை இங்கே சுட்டிக் காட்டலாம் என்று எண்ணுகின்றேன்.

"தண்ணீர்ப் பந்தரும் தருமக்கிணறும்
ஆதீண்டு குற்றியுமரும்பூஞ் சோலையும்
வழிநடைபோகு மக்களும் மாக்களும்
வெயிலாள் வாடித்துயரடையாது
மூகடு பாய்ச்சி மூடியுயர்த்தித்
திண்ணை வகுத்துக் கட்டிய நேர்தெரு
மூடிமடங்கள்...."

19ஆம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை யாழ்ப்பாணத்தில் தரை வழிப் பயணத்திற்கும் பாரம் ஏற்றுவதற்கும் மாட்டு வண்டில்களே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன.

மாட்டு வண்டிகளிலும் பலவகை இருந்தன. இரட்டை மாட்டுவண்டில், ஒற்றை மாட்டு வண்டில் (ஒற்றைத் திருகல்), கூடார வண்டில், வில்லு வண்டில் என்பன குறிப்பிடத்தக்கன. கூடார வண்டில்கள் இன்று பயன்பாட்டில் இல்லை. மிகச் சிறுபான்மையாக வண்டில் பயன்பாடு இன்றும் உள்ளது.

(அடுத்த ஞாயிறு தொடரும்)

பேராசிரியர்
எஸ். சிவலிங்கராஜா

## யாழ். பல்கலைக்கழகத்தில் 20.11.2009 இல் நடைபெற்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நினைவுப் பேருரை

ஒருவன் அரசனாக வாழலாம். ஆனால் அவன் மனிதனாகத்தான் மரிக்க வேண்டும்.

-செஸ்டர்

வலம்புரி

## ஒரு வேட்பாளர் வருகை தருகிறார் இன்னொரு வேட்பாளர் தகனம் செய்கிறார்

இன்று 2010ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 10ந் திகதி. இந்நாள் யாழ்ப்பாணத்தில் ஏதோ ஒரு வகையில் பேசப்படும் நாளாக அமைகின்றது.

இதைக் கூறும்போது இன்று ஜனவரி 10ந் திகதிக்கு என்ன முக்கியத்துவம் என்று நீங்கள் யோசிக்கலாம்.

இன்றுதான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகிறார். ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர்-வன்னி யுத்தம் நடத்தி விடுதலைப்புலிகளை தோற்கடித்த பின்னர்-ஜனாதிபதித் தேர்தலுக்கு அறிவிப்பு விடுத்த பின்னர் முதல் தடவையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளராக அவர் யாழ்ப்பாணம் வருவதால் யாழ்ப்பாண மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதே அவரின் யாழ்ப்பாண விஜயத்தின் முதன்மை நோக்கமாக இருக்கும்.

எதுவாயினும் இலங்கை ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

இதனைவிட வன்னியில் யுத்தம் நடத்தி சுமார் 3 இலட்சம் மக்களை முகாம்களில் தடுத்து வைத்து பின்னர் அவர்களின் ஒரு பகுதியினரை விடுவித்த நிலையில்-தங்கள் உறவுகளை வன்னியில் பறி கொடுத்து கண்ணீரும் கம்பலையுமாக விக்கித் தவிக்கும் அப்பாவி தமிழ் மக்களிடம் தற்போது ஜனாதிபதியாக இருக்கும் மகிந்த ராஜபக்ஷ வாக்கு கேட்க வருகிறார் என்பது முக்கியமான விடயம்தான்.

இது மட்டும்தான் முக்கியம் என்றால் இதற்காக இந்த இடத்தை ஒதுக்கியிருக்க வேண்டிய தேவையிராது. மாறாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை அவர்களின் தகனமும் இன்றுதான். வேலுப்பிள்ளையின் தகனத்தை செய்து வைப்பவர் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி வேட்பாளருமான சிவாஜிலிங்கம்.

ஆக, சிங்களத் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர்களின் ஒருவரான மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு வந்து வாக்கு கேட்க,

தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கமோ, வேலுப்பிள்ளை அவர்களைத் தகனம் செய்கிறார்.

இதுதான் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள உரிமை விவகாரம். இந்த விவகாரத்தை புரிந்து கொள்வதற்குப் பல காலம் எடுக்கும்.

ஏனெனில் வாக்குக் கேட்கும் கூட்டத்திலும் தமிழர். தகனம் செய்யும் நிகழ்விலும் தமிழர்.

அங்கும் தமிழர்; இங்கும் தமிழர் என்ற சிதறல் இருக்கும் வரை தமிழர் தகனங்களும் இருக்கவே செய்யும்.

இந்த தத்துவத்தை உணரும் போது தகனங்கள் தகனங்களாகும்.

# மிஹின் எயார் மூலம் ஆயுதக் கொள்வனவு தகவலை வெளியிட்டதால் அரசுக்கு தலையிடி!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான போரின் போது, ஜனாதிபதி மகிந்த சகோதரர்களின் மிஹின் எயார் நிறுவனத்திற்கு சொந்தமான பயணிகள் விமானங்கள் மூலம் சிறிலங்காவுக்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டதாக அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம வெளியிட்டுள்ள தகவல்கள் பாரதூரமானவை எனவும் இது குறித்து பல சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் தம்மிடம் கருத்து கேட்டதாகவும் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய சரத் அமுனுகம, இதுவரை வெளிவராத தகவல் ஒன்றை வெளியிடுவதாக கூறி, மிஹின் எயார் நிறுவனத்திற்கு சொந்தமான விமானங்கள் விடுதலைப்புலிகளுடனான போருக்கு தேவையான ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு அமைய பயணிகள் போக்குவரத்து விமானங்களில் ஆயுதங்களை கொண்டு செல்லுதல் சட்டவிரோதமானது. இந்நிலையில், அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு சொந்தமான தனியார் விமானசேவை பற்றி கூறியிருப்பதை பன்னாட்டு அமைப்புக்கள் கருத்தில் எடுத்துள்ளன என்றும் வெளிவிவகார அமைச்சர் என்றவகையில் அவை தன்னிடம் இது குறித்து விசாரித்துள்ளன என்றும் சிறிலங்காவின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் வெளிநாடுகளை சமாளிப்பதில் ஈடுபட்டிருக்கின்ற இந்த வேளையில், அரச தரப்பிலிருந்து வெளியிடப்படும் இத்தகைய தகவல்கள் புதிய தலையிடியாக அமைந்துள்ளன என்றும் ஜனாதிபதி மகிந்தவிடம் ரோகித போகல்லாகம தெரிவித்துள்ளார். மகிந்த சகோதரர்களினால் பல கோடி ரூபாய் நட்டத்தில் இயக்கப்படும் விமான சேவை மிஹின் எயார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## டெங்கு நோய் எதிர்ப்பும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தனது பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், உடுவில், நெடுந்தீவு, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரிவுகளில் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் ஒலி பெருக்கியுடன் கூடிய முச்சக்கரவண்டியும் தலா 30 இற்கு மேற்பட்ட தொண்டர்களும் வீடு வீடாகச் சென்று பிரசாரம் மேற்கொண்டு வருவதாகவும் அத்துடன் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் முதற்கட்டமாக 50 நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் தலைவரும் பேராசிரியருமான வி.கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் சுகாதாரத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க 10ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் குறித்த பிரிவு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் மேலதிகமாக 10ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## மாணவியைக் கடத்திய 7 மாணவர்கள் கைது

(கொழும்பு)

பாடசாலை மாணவி ஒருவரை கடத்திய குற்றச்சாட்டின் பேரில் 7மாணவர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மெதகம பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 15 வயது மாணவி ஒருவரை, ஏழு மாணவர்கள் கடத்திச் சென்றதாகவும், இந்த மாணவர்களை காவல்துறையினர் மடக்கிப் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவரும் 13 முதல் 15 வயது வரையானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பாடசாலை மாணவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (ந-5)

## பொங்கல் விழாவும் பரிசளிப்பு விழாவும்

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பொங்கல் விழாவும் தேசிய இலக்கியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் கிராமிய இசை,கவியரங்கம், வயலின் கச்சேரி, நிருத்திய வந்தனம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-36)

## முல்லைத்தீவு வலயத்தைச்சேர்ந்த ஆசிரியர் கவனத்திற்கு

தீவகக் கல்வி வலயத்தில் இணைப்புப் பெற்று கடமையாற்றி வரும் முல்லைத்தீவு வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய கோவையை தீவகக்கல்வி வலயத்திற்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் தற்போதைய அதிபர் ஊடாக வலயத்தில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

சுய விபரக் கோவையில் நிரந்தர முகவரி, தற்போதைய முகவரி ஆசிரியர் வகுதி, முதல் நியமனம், தகைமை இணைப்புக் கடிதம், தற்போது பெறும் சம்பள விபரம் போன்ற சகல விபரங்களுக்குரிய கடிதப் பிரதிகள் உள்ளடக்கப்படல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

(சாவகச்சேரி)

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறத் தொடங்கியதை அடுத்து எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை 20 மாணவர்களுடன் இயங்க ஆரம்பித்துள்ளது.

மேலும் விரைவில் கரம்பகம் அ.த.க. பாடசாலையும் ஆரம்பமாகவுள்ளதெனவும் கண்ணிவெடிப் பரிசோதனை நடைபெற்ற பின்னர் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா அ.த.க. பாடசாலை மற்றும் ஒட்டுவெளி அ.த.க. பாடசாலை ஆகியனவும் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (6-4-29)

## திருமுழுக்கு -ஓர் அறிமுகப் படலம்



திருமுழுக்கில் மூழ்கிறவன் எதைக் கண்டுபிடிக்கிறான்? திருமுழுக்கில் நாம் ஆவியில் மூழ்குகிறோம் கிறஸ்துவைக் கண்டுபிடிக்கின்றோம். இதைத்தான் இன்றைய நற்செய்தியின் முதல் பகுதி குறிப்பிடுகின்றது.

அதாவது இன்று இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.திருமுழுக்கின் அர்த்தம் என்ன? நாம் கண்டுபிடித்துவிட்டோமா? விவிலியத்தின் அடிப்படையில் பார்க்கின்றபோது புதிய பார்வைகளை, புதிய சிந்தனைகளை நாம் பெறவேண்டியவர்களாய் இருக்கின்றோம். இதனடிப்படையில் திருமுழுக்கு என்பது வெறும் பெயர் வைப்பது மட்டுமல்ல அது ஒரு அறிமுகச் சடங்கு. அது ஒரு கொண்டாட்டமும் கூட. ஒரு நபரை ஒரு சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி, அவரை அந்த சமூகத்திற்குள் ஏற்றுக்கொள்கின்றோம் என்பதன் கொண்டாட்டமாகும்.

இயேசுவுக்கு இது மிகவும் தேவைப்பட்டது. அவருக்கு 30 வயது வரை மறைந்த ஒரு வாழ்வு வாழ்ந்து வந்தார். அந்த வயது வரை அவர் தன்னுடைய பொது வாழ்வுக்கும், பணி வாழ்வுக்கும் தயாரித்து வந்தார். அவருடைய பணி வாழ்வின் தொடக்கத்திற்கு ஒரு அறிமுகப் படலம் தேவைப்பட்டது. அதுதான் இந்த திருமுழுக்கு விழா. தந்தையினுடைய மீட்புப் பணியைச் செய்வதற்கும் இறை அரசின் நற்செய்தியை உலகில் அறிவிப்பதற்கும் அவருடைய இந்த திருமுழுக்கு, ஓர் உடகமாக இருந்தது.

### பரமபிதா காட்டிய பாதை

இதைத்தான் நற்செய்தியின் இரண்டாம் பகுதியில் பார்க்கின்றோம். அதாவது தந்தை தன் மகன் இயேசுவை, தூய ஆவியின் வழியாக இந்த உலகிற்கு அறிமுகப்படுத்துகின்றார். "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" என்றார்.

ஆம், இன்று நாம் யார் பக்கம்? திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் இயேசுவை அணிந்துக்கொண்டு, இயேசுவைப் போல் மாறுக்கின்றார்கள். எனவே, திருமுழுக்குப் பெற்ற நாமும் இயேசுவைப் போன்று ஏழைகள், வலுவிழந்தவர்கள், இயலாமையில் இருப்பவர்கள் பக்கம் இருந்து அவர்களின் விடுதலைக்காக, அவர்களின் வாழ்வுக்காக உழைப்போம்.

ஜோன் ஸ்ரொபேட்

# அசத்திய கிரிக்கெட் நட்சத்திரங்கள்

கடந்த 2009ஆம் ஆண்டு இந்திய அணித் தலைவர் தோனி அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் உள்ளிட்ட நட்சத்திர கிரிக்கெட்



வீரர்களுக்கு சிறப்பானதாக அமைந்தது.

இது குறித்த ஒரு சிறப்புப்பார்வை,

கடந்த ஆண்டு நடந்த ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் இந்திய அணித் தலைவர் தோனி, அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் முன்னிலை வகித்தனர். இவர்கள் இருவரும் தலா 29 போட்டிகளில் பங்கேற்று ஆயிரத்து 198 ஓட்டங்கள் குவித்தனர்.

இவர்களைத் தொடர்ந்து கடந்த ஆண்டு நடந்த ஒரு நாள் போட்டிகளில் ஆயிரம் ஓட்டங்கள் கடந்த வீரர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் மைக்கல் ஹசி (ஆயிரத்து 106 ஓட்டங்கள்) சிம்பாப்வேயின் மசகட்சா (ஆயிரத்து 872 ஓட்டங்கள்) அவுஸ்திரேலியாவின் ஷேன் வோட்சன் (ஆயிரத்து 132 ஓட்டங்கள்) இலங்கையின் டில்சான் ஆயிரம் ஓட்டங்கள் எடுத்தனர்.

### சபாஷ் சமரவீர

கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டிகளில் இலங்கையின் சமரவீர ஆயிரத்து 237 ஓட்டங்களையும் மஹேல ஜெய வர்த்தனா ஆயிரத்து 194 ஓட்டங்களையும் எடுத்து அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் முதலிரண்டு இடம்பிடித்தனர்.

டெஸ்ட் அரங்கில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் வரிசையில் இலங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் (1172 ஓட்டங்கள்), அவுஸ்திரேலியாவின் ஹடிச் (ஆயிரத்து 112 ஓட்டங்கள்) இலங்கையின் டில்சான் (ஆயிரத்து 97 ஓட்டங்கள்) அணித் தலைவர் சங்கக்கார (ஆயிரத்து 83 ஓட்டங்கள்) அவுஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க் (ஆயிரத்து 42 ஓட்டங்கள்) ஆகியோர் உள்ளனர். இந்தியா சார்பில் டிராவிட் அதிக பட்சமாக ஆறு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 747 ஓட்டங் களை எடுத்தார்.

### ஜோன்சன் மிரட்டல்



அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் கடந்த ஆண்டு நடந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அதிக விக்கெட்டை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார். இவர் கடந்த ஆண்டு 13 டெஸ்ட், 30 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி முறையே 63, 46 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்தியா சார்பில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் சாதித்த பந்து வீச்சாளர்கள் வரிசையில் ஹர்பஜன் சிங் முன்னிலை வகித்தார். இவர் ஆறு டெஸ்ட், 26 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி முறையே 29, 31 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### பங்களாதேஷ் அசத்தல்

கடந்த ஆண்டு பங்களாதேஷ் அணி 19 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்று 14 வெற்றி, ஐந்து தோல்வியைப் பதிவு செய்தது. இதன் மூலம் அதிக வெற்றி சதவீதம் பெற்ற அணிகள் வரிசையில் பங்களாதேஷ் அணி (73.68%) முதலிடம் பிடித்தது. இதனைத் தொடர்ந்து இந்தியா (62.96%), அவுஸ்திரேலியா (61.16%) உள்ளிட்ட அணிகள் உள்ளன.

### ஆஸி. முதலிடம்

கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய அணி 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஏழு வெற்றி, மூன்று தோல்வி, மூன்று சமனிலையைப் பதிவு செய்தது. இதன் மூலம் அதிக வெற்றி சதவீதம் பெற்ற அணிகள் வரிசையில் அவுஸ்திரேலிய அணி (53.84%) முதலிடம் பிடித்தது. இதனையடுத்து இந்தியா (50%), இலங்கை (45.45%) அணிகள் உள்ளன.

# விம்பிள்டனுக்கு கிடைத்த கௌரவம்

விம்பிள்டன் டென்னிஸ் தொடருக்கு புதிய கௌரவம் கிடைத்துள்ளது.


நடால்

கடந்த 10 ஆண்டுகளில் (2000 முதல் 2009) சிறந்த விளையாட்டு உணர்வை வெளிப்படுத்திய போட்டிகளுக்கான கருத்துக் கணிப்பில் விம்பிள்டனுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இந்த கருத்துக் கணிப்பை லண்டனை சேர்ந்த தி டெலி கிராப் பத்திரிகை நடத்தியுள்ளது.

உலகின் நம்பர் -1 வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் இரண்டாம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் ஆகியோருக்கிடையே கடந்த 2008ஆம் ஆண்டு நடந்த விம்பிள்டன் இறுதிப்போட்டிக்கு கருத்துக் கணிப்பில் 17 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளது. 7 மணி நேரம் நீடித்த இப்போட்டியில் நடால் 4-6, 4-6, 7-6, 7-6, 9-7 எனற செட் கணக்கில் பெடரை வீழ்த்தி கோப்பை வென்றார். டென்னிஸ் வரலாற்றிலும் இப்போட்டி மிகச் சிறந்ததாக கருப்படுகிறது.

### இரண்டாவது இடம்

கடந்த 2005ஆம் ஆண்டு இஸ்தான்புலில் நடந்த சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு 15 சதவீத வாக்குகளைப் பெற்று கருத்துக் கணிப்பில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது.

விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் லிவர்பூல் அணி (4-2) 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் ஏ.சி. மிலனை வீழ்த்தியது. கால்பந்து அரங் கில் மறக்க முடியாத நிகழ்வுகளுள் இதுவும் ஒன்று. கடந்த 2004ஆம் ஆண்டு நடந்த பிரிமியர் லீக் இறுதிப் போட்டி 13 சதவீத வாக்குகளுடன் மூன்றாவது இடத்தையும் 2003ஆம் ஆண்டு நடந்த ரக்பி உலக கோப்பை இறுதிப் போட்டி 11 சதவீத வாக்கு களுடன் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன.

### ஆஷஸ் கோப்பை

இந்த கருத்துக் கணிப்பில் இடம் பெற்ற ஒரே கிரிக்கெட் தொடராக 2005ஆம் ஆண்டு நடந்த ஆஷஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் இடம் பெற்றுள்ளது. 18 ஆண்டுகளுக்குப் பின் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 2-1 என்ற கணக்கில் ஆவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஆஷஸ் கோப்பையை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

# உலகின் கூரை!

சாதனை படைக்கும் நினைப்போடு உலகின் உயரமான கட்டடங்களைக் கட்டும்போதெல்லாம் உலகப் பொருளாதாரம் பாதாளத்தில் விழுந்துவிடுகிறது என்று சென்டிமென்ட் வரலாறு சொல்கிறார்கள் நிபுணர்கள்.

90களில் கோலாலம்பூர் பெட்ரோனாஸ் டவர் கட்டும் போது ஆசியப் பொருளாதாரம் அடிவாங்கியது. 70களில் சிகாகோவில் சியர்ஸ் டவர் கட்டும் போது அமெரிக்கா ஆட்டம் கண்டது.

1930களில் நியூயோர்க்கில் வானுயர்ந்த கட்டடங்கள் பல எழும்பிய போது அமெரிக்காவின் பொருளாதார அழுத்தத்தில் சிக்கியது. இப்போது டுபாய் பொருளாதார நெருக்கடியில் தவிர்க்கும் போது உலகின் மிக உயர்ந்த கட்டடம் அங்கு திறப்பு விழா காண்கிறது. ஆம் புர்ஜ் டுபாய் கட்டடம் ஜனவரி 4ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது. எல்லா உயர



சாதனைகளையும் கபளீகரம் செய்யப்போகிறது இந்தக் கட்டடம்...

இதன் உயரம் 2684 அடி. இப்போதைக்கு உலகின் மிக உயர்ந்த கட்டடம் இது தான்! இதில் 160 மாடிகள் உண்டு. இத்தனை மாடிகளோடு உலகில் வேறு கட்டம் இல்லை. அலுவலகங்கள் ஹோட்டல்களோடு வீடுகளும் அமைந்த ஒரே உயரக் கட்டடம் இது தான்.

சுமார் 60 மைல் தூரத்திலிருந்தே இந்தக் கட்டடத்தைப் பார்க்க முடியும்.

இதைக் கட்ட ஆன செலவு சுமார் 55 ஆயிரம் கோடி ரூபாய். இவ்வளவு செலவு பிடித்த கட்டடம் உலகில் வேறெதுவும்இல்லை.


ஒரு இலட்சம் யானைகளின் எடைக்கு ஈடான கொன்க்ரீட்டில் இது கட்டப்பட்டது.


2004 செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் ஐந்து ஆண்டுகள் நான்கு மாதங்களில் முடிந்தது.

ஒரே நேரத்தில் இந்தக் கட்டடத்தில் 35 ஆயிரம் பேர் இருக்கலாம் 57 இயந்திரப் படிகள் இதில் உள்ளன. உலகிலேயே வேகமான இயந்திரப் படிகள் இங்குதான் இருக்கிறது. தரை தளத்திலிருந்து இரண்டே நிமிடங்களில் இதில் மொட்டை மாடிக்குப் போய் விடமுடியும்.

அட்ரியன் சிமித் என்ற அமெரிக்கரால் வடிவமைப்பு செய்யப்பட்ட இந்தக் கட் டடத்தை டுபாயின் அடையாளமாக மாற்றியவர் டுபாயை ஆளும் மன்னர் ஷேக் முகம்மது பின் ரஷீத் அல் மக்தூம். அவர் ஆட்சிக்கு வந்தது ஜனவரி 4 ஆம் திகதி அதனால் தான் அந்தத் திகதியில் திறந்திருக்கிறார்கள்.

# புதிதாக 4 பூமிகள்!





நாம் வசிக்கும் பூமி சூரிய குடும்பத்தில் இருக்கிறது. பூமியில் மட்டுமே உயிரினங்கள் வசிக்கின்றன.

மற்ற கோள்களில் உயிர்கள் வசிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாக உள்ளன. இருப்பினும் துணைக்கோளான சந்திரன், செவ்வாய் ஆகியவற்றில் தண்ணீர் இருப்பது அறியப்பட்டு உள்ளதால் அங்கும் உயிரினங்கள் இருக்கும் வாய்ப்பு உண்டு என்கிறது விஞ்ஞானம். இந்த சந்தேகத்துக்கு இன்னும் சில ஆண்டுகளில் விடைகிடைக்கலாம்.

அதேபோல விண்வெளி ஆராய்ச்சியில் பூமி போன்ற தன்மை கொண்ட கோள்கள் எதுவும் இருக்கிறதா? என்றும் தீவிரமாகத் தேடப்படுகிறது.

இந்த தேடல் முயற்சியால் கடந்த ஆண்டில் பாறைகளால் ஆன கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன்பு பாதி அளவு தண்ணீர் நிறைந்த கோள் ஒன்றும் அறியப்பட்டது இவற்றிலும் உயிர்கள் வசிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இதன் தொடர்ச்சியாக தற்போது பூமி போன்ற தன்மை உடைய மேலும் 4 கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையும் சூரிய குடும்பத்திற்கு அருகிலேயே சுற்றுகின்றன.

இவற்றில் 3கோள்கள் 61 விர்ஜினிஸ் எனப்படும் விருச்சிக ராசி நட்சத்திரக் கூட்டத்தின் சுற்றுவட்டப்பாதையில் சுற்றி வருகின்றன. இந்த மூன்றும் சூரியனின் இரட்டைப் பிறவி போன்ற தோற்றம் உடையவை.

இதன் எடை பூமியைப் போல் 5 முதல் 24 மடங்குவரை அதிகமாகும். 4ஆவது கோள் 23 லிப்ரா எனப்படும் துலாம் ராசி நட்சத்திரக் கூட்டத்தைச் சேர்ந்தது.

இந்த 4 கோள்களுமே வாழ்வதற்கு ஏற்ற தன்மை கொண்ட பாறைகளால் ஆனது. இவை பூமியில் இருந்து சில ஒளியாண்டு தூரத்தில்தான் அமைந்துள்ளன.


இந்த புதிய கோள்களை அமெரிக்காவின் நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர்.




## உலகின் மிகப்பெரிய 'சோலர்' அலுவலகம்

சூரிய ஒளியை மின் சக்திக்கு பயன்படுத்திக் கொள்ளும் சோலர் தொழில் நுட்பம் வேகமாக பெருகி வருகிறது. சோலர் கப்பல், விமானம், கட்டிடம், விளக்கு, அடுப்பு என்று இதன் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

பல்வேறு நாடுகளில் சோலர் கட்டிடங்கள் இருக்கின்றன, கட்டப்படுகின்றன. தற்போது சீனாவில் ஷாங்டாங் நகரில் டெலு பகுதியில் உலகின் மிகப்பிரம்மாண்டமான சோலர்



கட்டிடம் கட்டப்படுகிறது . 8 இலட்சம் சதுர அடி கொண்ட கட்டிடத்தின் மேற்பகுதியில் சோலர் தகடுகள் பதிக்கப்படுகிறது.

இது அந்தப் பகுதியின் மின் தேவையில் 30 சதவீதத்தை நிறைவு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலக கட்டிடம் இன்னும் ஒரு ஆண்டுக்குள் செயல்படத் தொடங்கும் என்று தெரிகிறது. வருங்காலத்தில் கட்டிடங்களில் அலங்கார கண்ணாடிகளுக்குப் பதிலாக சோலர் தகடுகளை பதிக்கும் பழக்கம் அதிகரிக்கும் என்றால் ஆச்சரியமில்லை.

## வருகிறது பாக்டீரியா 'வெடிகுண்டு'

விஞ்ஞானம் வளர வளர ஆயுதங்களும் பெருகி வருகின்றன. ஒளியையும், காற்றையும் எதிர்காலத்தில் ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள் என்று பிரபல ஜோதிடர் நாஸ்டர்டாமஸ் கணித்து கூறியிருக்கிறார்.

வளர்ந்து வரும் அறிவியல் நவீனங்களும் அதை உண்மைப்படுத்தும் விதத்திலேயே ஆயுதங்களைக் குவித்து வருகின்றன.

சமீபத்தில் அமெரிக்கா, ஒளியை சிறிய அளவிலான ஆயுதமாக பயன்படுத்தும் யுக்தியை கண்டுபிடித்து உள்ளது. ஆனால் அது இராணுவவீரர்களின் மருத்துவ உதவிக்கு பயன்படும் கத்தி என்று அமெரிக்கா அறிவித்தது.


இதேபோல் விதவிதமான ஆயுதங்கள் பல நாடுகளிடம் இருக்கின்றன. இந்தப் பட்டியலில் புதிதாகச் சேர இருக்கிறது பாக்டீரியா வெடிகுண்டு.

பாக்டீரியா என்பது நுண்ணுயிரியாகும். இதில் சைனோ பாக்டீரியா என்ற ஒரு வகை பாக்டீரியாக்களில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்தி பெற்றோலியம் தயாரிக்கிறார்கள் என்று கடந்த வாரம் பார்த்தோம். இதே பாக்டீரியாவில் வேறுசில மாற்றங்களை ஏற்படுத்தினால் அது வெடிக்கும் தன்மை உடையதாக மாறிவிடுகிறது.

அதாவது இந்த பாக்டீரியாவுடன், பாக்டீரியாபேஜ் எனப்படும் மற்றொரு வகை பாக்டீரியாக்கின் ஜீன்களைச் சேர்த்தால் அது இந்த மாற்றத்தைப் பெறுகிறது.

பின்னர் அந்த பாக்டீரியாக்கள் நிக்கல் என்ற உலோகத்தை நுகரும் வாய்ப்பு ஏற்பட்டால் வெடித்துச் சிதறுகிறது. எனவே இதனை சிறிய வெடி குண்டாக பயன்படுத்த முடியும்.

பாக்டீரியாக்கள் நுண்கிருமிகள் என்பதால் வேகமாகப் பரவும். அதில் இந்த மாற்றங்களைச் செய்து அனுப்பினால் எதிரிகளின் கோட்டைக்குள் எவ்வித பரிசோதனையிலும் சிக்காமல் உள்ளே நுழைந்து தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிடும். எனவே இது ஒரு ஆபத்தான ஆயுதமாக அவதாரம் எடுக்க இருக்கிறது.





# விஷமுள்ள டைனோசர்



பிரம்மாண்ட உயிரினமான டைனோசர்கள் அழிந்துவிட்டன. அவற்றைப் பற்றிய தகவல்கள் எப்போதுமே வியப்புக்குரியவை. உலகமெங்கும் கிடைக்கும் புதை படிவங்களின் அடிப்படையில் அவற்றின் பண்புகள், தன்மைகள் பற்றிய ஏராளமான விஷயங்களை நாம் அறிந்து வருகிறோம்.

டைனோசர்களில் தாவரங்களை உண்ணும் சாதுவான டைனோசர்கள் இருந்தன. அதேபோல் மற்ற மிருகங்களை வேட்டையாடி உண்ணும் அசைவ டைனோசர்களும் இருந்திருக்கின்றன. பறவை போன்ற இறக்கை உள்ள டைனோசர்களும் அறியப்பட்டு உள்ளன. இந்த வரிசையில் தற்போது, விஷமுள்ள டைனோசர் இனமும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

டைனோசர்கள் பிரம்மாண்டமாக இருந்தாலும் வேட்டையாடித்தாக்கி உண்ணும் என்பதாகவே இதுவரை நம்பப்பட்டு வந்தது. ஆனால் சமீபத்தில் கிடைத்த ஆய்வு முடிவுப்படி விஷத் தன்மை உடைய டைனோசர்களும் இருந்துள்ளன. அவை விஷத்தை பயன்படுத்தி உணவு தேடிக் கொண்டுள்ளன என்பது தெளிவாகி இருக்கிறது.

துருக்கி அருகில் கிடைத்த ஒரு வகை டைனோசரின் படிமங்கள் இதை உறுதிப்படுத்துகிறது. இந்த டைனோசருக்கு இறக்கைகளும், வித்தியாசமான தாடைப்பகுதியும் உள்ளன. ஏற்கனவே அமெரிக்காவின் மெக்சிகோ மாகாணத்தில் 2000ஆம் ஆண்டு வரிப்பள்ளங்களைக் கொண்ட டைனேசரின் பற்கள் கிடைத்தன. அப்போதே விஷத் தன்மை உடைய டைனோசர்கள் இருக்கக்கூடும் என்று நம்பப்பட்டது.

தற்போது இதற்கான உறுதியான ஆதாரங்கள் கிடைத்து உள்ளன. இந்த புதிய டைனோசருக்கு சினார்னித்தோசரஸ் என்று பெயரிடப்பட்டு உள்ளது. இவற்றின் தாடைப் பகுதியில் வரிப்பள்ளங்களைக் கொண்ட பற்களும், விஷம் சுரக்கும் சுரப்பிகள் இருந்ததற்கான தடயங்களும் இருக்கின்றன.

இவை பாம்புகள் போல பதுங்கி இருந்து பாய்ந்து விஷத்தன்மையால் வேட்டையாடி உண்டு வந்துள்ளன. இந்த டைனோசரை அமெரிக்காவின், கான்சாஸ் பல்கலைக்கழக ஆய்வுக்குழு கண்டுபிடித்து உள்ளது.

இந்தவகை டைனோசர்களுக்கு இறக்கைகளும் இருப்பது பரிணாம உருமலர்ச்சிக் கொள்கைக்கான சிறந்த சான்றாக இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

## பொன்சேகா வெற்றி பெற்றால் இந்து சமுத்திர பிராந்தியத்துக்கு ஆபத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதியானால் இந்தியாவுக்கும், இந்துசமுத்திரத்திர பிராந்தியத்திற்கும் அது பலத்த ஆபத்தை ஏற்படுத்தும் என ஜனாதிபதியின் ஆலோசகர் ராசீக் சரூஃப் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகா வெற்றியீட்டினால் அது இந்து சமுத்திர பிராந்தியத்திற்கும், இந்தியாவுக்கும் ஆபத்தாக முடியும்.பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் வழங்கியது போல அதிகளவு ஆயுதங்களை இந்தியா இலங்கை அரசுக்கு வழங்கவில்லை.

ஆனால் போரின் போது விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல்களின் நடமாட்டங்களை மற்றும் விநியோக வழிகளை முடக்கும் நடவடிக்கைகளை இந்தியா முன்னின்று செய்திருந்தது.

சிறிலங்கா கடற்பரப்பின் பாதுகாப்பையும் இந்தியா பொறுப்பேற்றிருந்தது. அத்துடன் கடற்படையினருக்கும் அதிகளவு பயிற்சிகளையும், கப்பல்களையும் வழங்கியிருந்தது.அதுதான் போரில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது என்றார். (ந-5)

## ஜி.எஸ்.பி. சலுகை ரத்து...

தோமஸ் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கைக்கான ஜி.எஸ்.பி வரிச் சலுகைத் திட்டத்தினை ரத்து செய்ய வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்திற்கு பிரித்தானியா ஆதரவளிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாக சுமத்தபட்டு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பிரித்தானிய இராஜதந்திர வழிகளில் தமது நிலைப்பாட்டை இலங்கையிடம் வெளிப்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலண்டனில் நடைபெற்ற சண்டே லீடர் பத்திரிகையின் சிரேஷ்ட ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் முதலாண்டு நினைவஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் லசந்த விக்ரமதுங்க படுகொலை சம்பவம் போன்றவை சுயாதீனமான முறையில் விசாரிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.பிரித்தானிய வாழ் தமிழ் சட்டத்தரணிகளினால் இந்த நினைவு அஞ்சலிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை ஏற்றுக்கொள்ள முடியாததொன்றென அவர் குறிப்பிட்டுள்ளார். இரண்டு கட்டுரைகளை எழுதியமைக்காக வழங்கப்பட்டுள்ள தண்டனை ஜனநாயக நெறிமுறைகளுக்கு முரணானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயுதங்களை விற்பனை செய்யும் இலங்கைக்கான அனுமதிப் பத்திரத்தை பிரித்தானியா ரத்து செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தொடர்ச்சியாக இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை பிரித்தானியா வழங்கும் என அமைச்சர் கெரத் தோமஸ் தெரிவித்துள்ளார். (ந-5)

## நல்லூர் இளங்...

நடைபெறவுள்ள இந்த மண்டபத்தில் பொதுக்குழு தீர்மான்ங்கள், கட்சியின் புதிய நிர்வாகிகளை அங்கீகரித்தல் மறும் இலங்கை தமிழரசுக்கட்சியின் 60 ஆம் ஆண்டு மலர் வெளியீடு ஆகிய விடயங்கள் இடம்பெறவுள் என.

இதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-3)

## வேலுப்பிள்ளையின் இறுதிக்...

நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பொறுப் பேற்று நேற்று மாலை வல்வெட்டித் துறைக்கு எடுத்துவந்தார். எனினும் வல்வெட்டித் துறைக்கு அழைத்து வரப்பட்ட பார்வதி வேலுப்பிள்ளை சுகவீனம் காரணமாக ஊரணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காலஞ்சென்ற திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடைபெற வேண்டும் என தான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மரண விசாரணை நடைபெற்றதாக வும்,

பிரேத பரிசோதனை நடைபெற்று, சட்ட வைத்திய அறிக்கையின் படி இயற்கை மரணம் என சான்றிதழ் கிடைத்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் நல்லடக்கம் செய்யப்படவிருந்த போதிலும், தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அதனை பொறுப்பேற்று வல்வெட்டித்துறைக்கு எடுத்துவந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

வேலுப்பிள்ளையின் மனைவி பார்வதி வேலுப்பிள்ளை எவ்வித நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்யப்பட்டுள்ளார். டென்மார்க், கனடா மற்றும் இந்தியாவிலுள்ள பிள்ளைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள வரவில்லை.

அரசாங்கம் பாதுகாப்பு வழங்கும் எனத் தெரிவித்திருந்தாலும் அவர்கள் அதனை நிராகரித்துவிட்டனர் என்றும் சிவாஜிலிங்கம் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை வேலுப்பிள்ளைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தமிழ் நாட்டிலிருந்து விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவன் உட்பட மூன்று பிர முகர்கள் நேற்றுமுன்தினமிரவு கொழும்பு வந்தடைந்து, நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சொலமன் சிறில், பா.அரியநேத்திரன், செல்வம் அடைக்கல நாதன் ஆகியோரும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் பூதவுடல் தற்போது வல்வெட்டித்துறை தீருவிலிலுள்ள குமரப்பா புலேந்திரன் நினைவு தூபிக்கு அண்மையாகவுள்ள இடத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பூதவுடல் இன்று காலை 11 மணிக்கு தகனம் செய்யப்படும். (ந-5)

## யுத்தத்தால் நிறைவேற்ற...

அழுத்தம் காரணமாக ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதர வளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கை இணைத்தல், உயர்பாதுகாப்பு வல யங்களை அகற்றுதல் உள்ளிட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

எனவே இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளுக்கு ஆதர வளித்து வருகிறது.

மிகவும் கடும் போக்குடைய இனவாத கட்சியான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு யுத்தத்தின் மூலம் கிடைக்கப் பெறாத வெற்றியை அரசியல் ரீதியாக அடைவதற்கு முனைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க கிறீன் கார்ட் உரிமையுடைய நபர் ஒருவர் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## ஜனாதிபதி மகிந்த...

இன்று காலை 8மணிக்கு பலாலி விமான நிலையத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி சமயத் தலங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடவுள்ளதுடன் மதத்தலைவர் களையும் சந்திக்கவுள்ளனர்.

தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு யாழ்.மாவட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளினை தளர்த்தி மக்களை மீள்குடியேற்றல், பாதுகாப்பு கெடுபிடிகளை நீக்குதல் போன்ற முக்கிய முடிபுகளை அறிவிப்பார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் இவ் விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசவுள்ளார் எனவும் ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரும் ஜனாதிபதியுடன் முக்கிய பல அமைச்சர்களும் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முன்னாள் போராளி...

712 பேரும் புனர்வாழ்வு முகாமில் வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் இவர்கள் பயங்கரவாத செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்பு அற்றவர்கள் என்று புனர்வாழ்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடுதலைசெய்யப்பட்ட 712 பேரில் 100 பேர் 18 வயதிற்கு குறைந்த சிறுவர் போராளிகளாவார்கள்.

முதற்கட்டமாக முன்னர் 412 முன் னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட்டதாக புனர்வாழ்வுத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

விடுதலை செய்யப்படுகின்ற இம் முன்னாள் போராளிகள் இறுதியுத்தத்தின் போது படையினரால் கைது செய்யப்பட்டும் மற்றும் நலன்புரி கிராமங்களில் இருந்தும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் புனர்வாழ்வு முகாம்களுக்கு அழைத்து செல்லப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## கரு ஜெயசூரியா...

நல்லூர் திவ்ய ஜீவன சங்கத்தில் நடக்கும் ஐக்கியதேசியக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

பிற்பகல் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் அவர், மாலை நல்லை ஆதீன குரு முதல்வர், யாழ். ஆயர் ஆகியோரை சந்திப்பார் என ஐக்கியதேசியக் கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ந-5)

# மரண அறிவித்தல்கள்



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய காணிப்பதிவு உத்தியோகத்தர்

### திருவேங்கடம் வேலுப்பிள்ளை

அவர்கள் 06.01.2010 (புதன்கிழமை) இரவு 8 மணிக்கு பானாகொடை இராணுவத் தடுப்பு முகாமில் காலமானார்.

அன்னார் திருமதி பார்வதிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், மனோகரன் (டென்மார்க்), திருமதி ஜெகதீஸ்வரி மதியாபரணம் (தமிழ்நாடு), திருமதி வினோதினி இராஜேந்திரன் (கனடா), பிரபாகரன் (தலைவர், தமிழீழ விடுதலைப்புலிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2010 இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, காலை 11 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி பொது மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். தயவு செய்து இத் தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்<br>
எம்.கே.சிவாஜிலிங்கம்<br>
யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்,<br>
யாழ். மாவட்டம்

(C-4177)

### திருமதி இராஜலக்சுமி அரியரத்தினம் (அரியம் மாமி)

மானிப்பாய் மேற்கு கட்டுடையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலக்சுமி அரியரத்தினம் அவர்கள் நேற்று 09.01.2010 கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கட்டுடை<br>
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.<br>
T.P:021 300 8876

தகவல்:<br>
அ.இரத்தினமோகன் (பவா) (மகன்)<br>
க.செல்லப்பா (மருமகன்)<br>
திருமதி க.செல்லப்பா (மகள்)

(C-4178)

**Systems Engineer MCP - MCSE**
**Become an Engineer**
கற்கும் அனைவருக்கும Free
ICDL-Computer Driving Lincence)
Dip.. in hardware
A+,N+ (ComTIA)
Per Module Rs.3800 Only
இச்சலுகை 15.01.2010 வரை மட்டுமே.
விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

**PIANO / VIOLIN NOTES**
Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக் குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
S.S.RAJEINDRAN Karaweena Isai Manram
75, TEMPLE ROAD, NALLUR, T.P.No.:0777031293
(161)

**டெங்கு நோயறிகுறிகள் ஏற்பட்டால்**

⊙ காய்ச்சல் ஏற்பட்டதும் முடியுமான வரை படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
⊙ அதிகமான நீராகாரம் அருந்தச் செய்யுங்கள்.
⊙ பாடசாலைகள், வேலைத் தலங்களுக்குச் செல்வதைத் தவிருங்கள்.
⊙ அஸ்பிரின், அஸ்பிரின் கலந்த மருந்துகளை பாவிக்கக் கூடாது பதிலாக பரசிற்றமோல் பாவியுங்கள்.
⊙ உடனடியாகவே அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த வைத்திய ஆலோசனையுடன் உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
நோய் ஏற்பட்டால் ஆரம்பத்திலேயே உரிய வைத்திய ஆலோசனை பெற்று ஏனையோருக்கும் ஏற்படாமல் பாதுகாப்போம். -வலம்புரி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.